Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 363

ஞாயிற்றுக்கிழமை
24 நவம்பர் 2024

கார்த்திகை 09
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"அவை தெளிவாத்தான் இருக்கினம். எங்கட சனம் தான் குழம்பிப்போய் திசை தெரியாமல் முடிவெடுத்திட்டினம் போல"

# உள்ளாட்சித் தேர்தல் 2025 முற்பகுதியில்!

## புதிய வேட்புமனுக்களை கோருவதற்கு ஆலோசனை

**கொழும்பு, நவம்பர் 24**

**உள்ளூராட்சித் தேர்தல்கள் அடுத்தவருடம் முற்பகுதியில் நடத்தப்படும் என்று வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித் துள்ளார்.**

14



## எம்.பி.க்களுக்கு சலுகைகள் 'கட்'

கொழும்பு, நவ. 24
நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனுபவித்துவரும் சலுகைகள் பெருமளவில் நீக்கப்படவுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

14

## மனித உரிமைகளை காக்க உள்ளகப் பொறிமுறையே!

### வடக்கு மக்களும் எம்மை ஆதரிப்பர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24
இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப் பதற்கு உள்ளகப் பொறிமுறை ஊடான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் திட்டவட்டமாகத் தெரி வித்துள்ளார்.

14




(படம்: ஐ.சிவசாந்தன்)

## மாவீரர் நினைவாலயம் நல்லூரில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
மாவீரர்களை அஞ்சலிக்கும் விதமாகவும், அவர்களின் தியாகங்களை ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்குக் கடத் தும் விதமாகவும் மாவீரர்களின் பெயர்கள் மற்றும் இன் னும் சில முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய 'மாவீ ரர் நினைவாலயம்' நல்லூரில் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

15

## மோடியுடனான ஒப்பந்தத்தை உடன் நடைமுறைப்படுத்துக

### அநுரவுக்கு ரணில் அழுத்தம்

கொழும்பு, நவ. 24
இந்தியாவும் இலங்கையும் கடந்த வருடம் கைச்சாத்திட்ட ஆவணத்தை ஜனாதிபதி அநுர குமார உடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என முன்னாள் ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க வலி யுறுத்தியுள்ளார்.
ரணில் விக்கிரமசிங்க தற்போது இந்தியாவுக்குப்

14

வடக்கு விவசாய அமைச்சின் செயலர்

## ஜெகூவின் பதவி திரும்பப்பெறப்பட்டது

### ஆளுநர் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 24
வடக்கு மாகாண விவசாய மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பா சன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும்

15

பதுளை விபத்து;

## படுகாயமடைந்த மாணவன் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், நவ. 24
சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்க லைக்கழகத்தின் களப் பயிற்சிக்காகச் சென்ற வேளையில், பேரூந்து தடம் புரண்டமையால் ஏற்பட்ட விபத்தில் படுகாயமடைந்த யாழ். கந்தர்ம டம் பகுதியைச் சேர்ந்த மாணவன் 23

14

சட்டத்தரணியின் வீட்டில்

## ஒன்றரைக் கோடி திருட்டு 2 சந்தேகநபர்கள் கைது!



யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதி யில் சட்டத்தரணியொருவரின் வீட்டில் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் நகைகளைத் திருடிய குற்றச் சாட்டில் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்

15

## வயல்வேலைக்கு சென்றவர் சாவு!

முல்லைத்தீவு, நவ. 24
முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு, சுதந்திரபுரம் கரிசல் வயல்வெளிப் பகு தியில் கூலி வேலைக்கா கச்சென்றகுடும்பத்தலை வர் சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.
சுதந்திரபுரம் மத்தி உடை யார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த சிவஞானம் றமேஸ்குமார்

14

## அரசாங்கம் – ஐ.எம்.எப். பேச்சுக்கள் பெருவெற்றி

கொழும்பு, நவ. 24
இலங்கை அரசாங்கத்துக் கும், சர்வதேச நாணய நிதிய தத்துக்கும் இடையே முன் னெடுக்கப்பட்ட மூன்றாம் கட்ட கடன்பெறுகைக்கான பேச்சுகள் வெற்றியளித்துள் ளன.
பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடிய பின்னர் இதுவரை இரண்டு தடவைகள் இலங்கைக்குக் கடன்கள்வழங்கப்பட்டுள்ளன.
மூன்றாம் கட்ட கடன்களுக் கான பேச்சுவார்த்தைகள் கடந்த சில நாள்களாக முன் னெடுக்கப்பட்டுவந்த நிலை யில், அந்தப் பேச்சுவார்த்தை கள் வெற்றியளித்துள்ளன என்றும், இது

14

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் அபாயத்தை எதிர்கொள்ள வடக்கு மாகாணம் தயார்நிலை

யாழ்ப்பாணம், நவ. 24

எதிர்வரும் நாள்களில் வடக்கு மாகாணத்தில் இடர் பாதிப்புகள் ஏற்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாக துறைசார் திணைக்களத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பருவகால மழை மற்றும் இடர்தணிப்பு முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு ஆளுநர், எதிர்வரும் நாள்களில் தாழமுக்கம் ஒன்று வங்கக் கடலில் உருவாகலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதன் நகர்வுப் பாதை சரியாக இன்னமும் கணிக்கப்படவில்லையாயினும், நாம் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 வெள்ள அபாய இடர் பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்டமும் இடரை எதிர்கொள்வதற்கு தயாரான நிலையில் இருப்பதாக யாழ். மேலதிக மாவட்டச் செயலர் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில், மன்னார் மாவட்ட மருத்துவமனையூடாகச் செல்லும் கால்வாய் துப்புரவு செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்ட மன்னார் மாவட்டச் செயலர், மக்கள் இடரின்போது இடம்பெயர நேரிட்டால் அவர்களைத் தங்க வைப்பதற்குரிய நிலையங்கள் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்வாய்கள் அனைத்தும் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டினார். இடர்நிலைமை ஏற்பட்டால் அதை எதிர்கொள்ளக்கூடிய வகையில் இரவிலும் பணியாற்றுவதற்கு பணியாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையின் சார்பில் பங்கேற்ற பிரதிநிதி குறிப்பிட்டார். கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலர் இங்கு குறிப்பிட்டார். குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து பயணிகளை ஏற்றி இறக்கும் இரண்டு படகுகளையும், புயல் நிலைமை ஏற்பட்டால் பாதுகாத்து தருவதற்கு கடற்படையினரின் உதவியை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் கோரினார். அதற்கும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்தனர்.

கால்நடைகள் கடந்த காலத்தில் இடர்நிலைமையில் அதிகளவில் உயிரிழந்தமையை கருத்தில்கொண்டு, கால்நடைகளை முற்கூட்டியே பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவத்குரிய ஒழுங்குகள் கண்டாவளை மற்றும் நானாட்டானில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார். இதேவேளை, இடர் நிலைமைகளை எதிர்கொள்வதற்காக கடற்படையினரின் 16 குழுக்கள் படகுகளுடன் தயாராக இருப்பதாகவும் மேலதிகமாகத் தேவைப்பட்டால் அதையும் பெற்றுக் கொள்ளக்கூடிய தயார் நிலையில் தாம் இருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர். (ச-66, 20, 159)

# புயல்உருவாகும்வாய்ப்புடன் வடக்கு - கிழக்கில் கனமழை!

யாழ்ப்பாணம், நவ. 24

**வங்காள விரிகுடாவில் உருவாகிய காற்றுச் சுழற்சி காற்றமுத்தத் தாழ்வு நிலையாக உருவாகும். இது இன்று தீவிர காற்றமுத்தத் தாழ்வுநிலையாக மாறிப் பின்னர் நாளை காற்றமுத்த தாழ்வு மண்டலமாக மாற்றம் பெறும்.**

26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மிதமான வலுக்கொண்ட புயலாக மாற்றமடையும். இதனால், தற்போது கிடைக்கும் மழை இன்று முதல் தீவிரமடையும். குறிப்பாக நாளை முதல் 28 ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புயல் கரையைக் கடக்கும் இடம் தற்போது வரை மிகச் சரியாக கணிக்க முடியவில்லை. நாளை மறுதினத்தின் பின்னரே கணிக்கலாம். தற்போதைய நிலையின்படி இந்தியாவின் தமிழ்நாட்டின் புதுச்சேரி கடலூருக்கு அண்மித்த தாகக் கரையைக் கடக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னரே குறிப்பிட்டபடி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான 48 மணி நேரத்தில் 350 மில்லிமீற்றரை விட உயர்வான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் அதிக உயரம் கொண்ட கடலலைகள் காரணமாக கடல்நீர் குடியிருப்புகளுக்குள் உள்வருகை தொடர்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை மற்றும் காலி மாவட்டக் கரையோர மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். கனமழை காரணமான வெள்ள அனர்த்தம் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம்.

குறிப்பாக 26, 27 ஆம் திகதிகளில் அதிக விழிப்போடு இருத்தல் அவசியம். மிக வேகமான காற்றினால் பாதிக்கக்கூடிய மரங்கள், கட்டடங்கள் என்பன போன்ற விடயங்களில் கவனம் செலுத்துதல் அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ச-66,20)

# மழை இடர்நிலை அபாயம் வடமராட்சி தயார் நிலை!

யாழ்ப்பாணம், நவ. 24

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகும் காற்றமுத்தத்தாழ்வுமண்டலத்தை அடுத்துவடக்குமாகாணத்துக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் வடமராட்சி பிரதேசத்தில் மழை இடரினை எதிர்கொள்ளும் வகையில் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

காற்றமுத்த தாழ்வு நிலையின் காரணமாக யாழ்ப்பாண மாவட்டம் உள்ளிட்ட வட மாகாணத்தில் மழைவீழ்ச்சி அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் வடமராட்சியில் வெள்ளப் பாதிப்பு உள்ளிட்ட மழை இடர்களினால் பாதிக்கப்படும் மக்களை அந்தந்த பகுதி கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக தற்காலிக முகாம்களில் தங்கவைப்பதற்கும் மக்களுக்கு உணவுகளை வழங்குவதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-100)

# திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், நவ.24

யாழ். மாநகர பிரதேசத்தில் திண்மக் கழிவகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் இடங்களில் குடியிருப்பாளர்களால் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகின்றன. டெங்குப் பரவலுக்கு ஏதுவாகக் காணப்படும் கழிவுகளைச் சேகரித்து பொறியாக்கி வைக்கும் பொருட்டு அவற்றை கழிவகற்றும் பிரிவினர் அகற்றி வருகின்றனர்.

டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் கொழும்புத் துறையில் இக் கழிவுகள் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ரி-45-17)

வாடிக்கையாளர்களுக்கு முன்கூட்டிய நத்தார் நல்வாழ்த்துக்கள்...!!!
உங்களுக்குத் தேவையான வீட்டு உபயோகப் பொருட்கள் யாவற்றையும்
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நத்தார், வருடப்பிறப்பு பண்டிகைகளை முன்னிட்டு கவர்ச்சிகரமான
விலைக்கழிவுகளுடன் பெற்று பண்டிகைகளை
மன மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள்.

V.K.RAJARATNAM
200 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
1C ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பலாலியில்

# இராஜேஸ்வரி ஆலய விடுவிப்பு படையினர் மீளவும் கட்டுப்பாடு

**யாழ்ப்பாணம், நவ. 24**

**பலாலி கண்ணார் வயல் இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய வேலி முழுமையாக அடைக்கப்பட்ட பின்னரே சுமூகமான முறையில் வழிபாடுகளை மேற்கொள்ளமுடியும் என தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்ணர் தெரிவித்துள்ளார்.**

பலாலி கண்ணார் வயல் இராஜராஜேஸ்வரி ஆலயம் தினசரி வழிபாடுகளுக்கு இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டது. இந்த நிலையில்குறித்தவீதிமூடப்பட்டிருப்பதாக செய்திகள் வெளிவந்தன.

இது குறித்து தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்ணருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த ஆலயம் விடுவிக்கப்பட் டுள்ள பொழுதிலும் ஆலயத்தின் சூழ உள்ள பகுதிகள் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இதன் காரணமாக ஆலயத்தைச் சூழ முறையான வேலி அமைத்த பின்னரே தினசரி வழிபாடுகளுக்காகப் பொதுமக்களை அனுமதி வழங்குமாறு இராணுவத்தினர் கோரியுள்ளனர்.

அதற்கமைய கோயிலைச் சூழ முறையானபாதையூடாகபரிபாலன சபையினரால் வேலி அமைத்த பின் வழிபாடுகளுக்கு செல்லமுடியும்.

அதுவரை வழமை போல் வெள்ளிக்கிழமைகளில் மாத்திரமே பாதுகாப்புடன் வழிபாட்டு நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (ச-125)



## சீன அரசால் வீடுகள்; ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, நவ. 24

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தும் நோக்கில் சீன அரசாங்கத்தின் 552 மில்லியன் சீன யுவான் நிதியுதவியின் கீழ் 1,888 வீடுகள் மற்றும் 108 மூத்த கலைஞர்களுக்கான வீடுகள் அமைப்பதற்கான இணை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பத்தரமுல்ல, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம் பெற்றது.

நிகழ்வில் நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கிவு சென் ஹோன்ங் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கசிப்புடன் மூவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.24


யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய கசிப்பு காய்ச்சுதலில் ஈடுபட்ட மூவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் வைத்து மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-4527,20)

## மக்களின் நம்பிக்கையை அநுர அரசு காப்பாற்றும்

### வன்னி எம்.பி. ஜெகதீஸ்வரன் கூறுகிறார்



வவுனியா, நவ. 24

வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய அரசாங்கங்கள் போல் அல்லாது செயல்வடிவில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வன்னிமாவட்ட பிரதான அலுவலகத்தைத் திறந்துவைத்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

76 வருடங்களுக்கு பின்னர் ஊழலற்ற நேர்மையான ஓர் அரசாங்கத்தை மக்கள் அமைத்துள்ளார்கள். எமது வெற்றியை உறுதிப்படுத்திய அனைத்து மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அனைத்து மக்களையும் உள்வாங்கி சம வாய்ப்புகளையும் உரிமையையும் பெற்றுக்கொள்வதில் நாங்கள் முன்னிலையில் இருப்போம்.

அதேபோல வளமான தேசத்தையும் அழகான வாழ்வையும் அமைப்பதற்கு நாட்டுமக்கள் எங்களோடு ஒத்துழைக்கவேண்டும். எதிர்காலத்தில் எம்மால் செய்யப்படும் அனைத்து வேலைத்திட்டங்களும் மக்கள் மயமானதாகவே இருக்கும் - என்றார். (ச-110)

## மீளாய்வு செய்யப்படும் கல்விச் சீர்திருத்தங்கள்


கொழும்பு, நவ. 24

கடந்த 5 ஆண்டுகளில் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு திட்டங்களை மீளாய்வு செய்ய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு கல்வி துறைசார் நிறுவனங்களால் அண்மைக்காலமாக கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், அந்த முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையை எட்டவில்லை.

இந்த முன்மொழிவுகள் மற்றும் வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்த பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவு முன்வைக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார். (ச-இ)



## அநுரவின் திட்டங்கள் ஆதரவு நல்குவோம்


### ரோஹித தெரிவிப்பு

கொழும்பு, நவ. 24

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்துள்ள கொள்கைப் பிரகடனம் சிறந்தது. சிறந்த திட்டங்களை செயற்படுத்த முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்வைத்துள்ள கொள்கைப் பிரகடனத்தில் நடைமுறைக்கு சாத்தியமான பல திட்டங்களை முன்வைத்துள்ளார். நாட்டுக்கு நன்மை பயக்கும் சிறந்த திட்டங்களுக்கு நிபந்தனையற்ற வகையில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். நாட்டுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிப்போம் - என்றார். (ச-இ)



## யாழ். கிரிக்கெட் வீரர்களுக்கு சங்கக்காரவால் ஊக்கமளிப்பு

கொழும்பு,நவ.24

இலங்கையின் கனிஷ்ட கிரிக்கெட் அணிகளில் இணைக்கப்பட்டுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு கிரிக்கெட் முன்னாள் வீரர் குமார சங்கக்காரவால் கிரிக்கெட் உபகரணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாணத்தின் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்களுக்கு தனது ஆதரவையும் வழங்கியுள்ளார். ரஞ்சித்குமார் நியூட்டன், கே. மாதுலன், வி. ஆகாஸ் ஆகியோரே யாழ்.மாவட்டத்திலிருந்து இலங்கையின் கனிஷ்ட கிரிக்கெட் அணியில் பங்கேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**பிரிவு - 56**

* Diploma in English / Spoken English
* Diploma in Information & Communication Technology
* Diploma in Artificial Intelligence (AI)

**ஏனைய பிரிவுகள்**

* Diploma in Human Resource Management (ICVE Approuved)
* Diploma in Human Rights
* Diploma in Foundation Law
* Diploma in Leadership & Business Management
* Diploma in Caregiver
* Diploma in Political Science

ஆரம்பம் 30.11.2024

காலம் 03 மாதங்கள் | பெறுமதிமிக்க சான்றிதழ்

(CS 1925) A-1

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறை கால வகுப்புக்கள்,
English, ICT (Grade 6-11, G.C.E O/L.A/L)
ஆரம்பமாகின்றன.

IPS to your future
Thirunelvely
T.P: 077 570 4893
077 016 1143



## திருநெல்வேலியில் வாசிப்பு மாத நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.24

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வாசிப்பு மாத நிகழ்வு நல்லூர் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரால் அறநெறி தொடர்பான விழிப்புணர்வும், மத்தியஸ்தசபை அபிவிருத்தி உத்தியோகத்தரால் மாணவர்களுக்கான ஆளுமை விருத்தி தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. (ரி-66)

## மரம் நடுகை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.24

மரம் நடுகை மாதத்தையொட்டி பனை அபிவிருத்திச்சபை முன்பு நடைபெற்ற கற்பகச் சோலை பனை நடுகைத் திட்டத்தை மீளவும் ஆரம்பிக்கவுள்ளது. இந்த நிகழ்வுக்கான அங்குரார்ப்பண வைபவம் சாவகச்சேரியில் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பல முக்கிய பிரமுகர்கள், பனை அபிவிருத்தி தொடர்பான சங்கங்கள், பனை ஆய்வாளர்கள், பனை ஆர்வலர்கள், பனை விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். எதிர்வரும் பனை நடுகை மாதங்களில் பனை நடுகையை நீண்ட காலமாக மக்கள் மத்தியில் ஊக்குவித்து பனை நடுகையின் அடையாளமாகத் திகழ்ந்தவர்களுக்கு 'கற்பகக் காவலர்' என்ற விருதினையும், சமூகத்தில் பனை நடுகையை அல்லது உற்பத்தியை ஊக்குவிப்பவர்களுக்கு 'பனை ஆர்வலர்' என்ற சான்றிதழ்களும் வழங்கவுள்ளதாகவும், பனை நடுகையை ஊக்குவிக்கும் முகமாக கற்பகச்சோலை நிதியமும் அபிவிருத்திச் சபையால் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி. சகாதேவன் தெரிவித்துள்ளார். (ரி-45-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

கல்விப் பெருமையாய்
கலாநிதிப் பட்டம்
பெறும் செல்ல
மகளுக்கு
சிறப்பான
வாழ்த்துக்கள்.

Congratulations

**கலாநிதி**
**ஸ்ரீமதி ஹம்சினி**
**ராஜாராம் சர்மா**



Best Wishes

நல்மனமும் நற்குணமும் நிரம்பப் பெற்று
நனிசிறந்த ஆற்றலதும் மேவிநிற்க
சொல்வளமும் சுய முயல்வும் கொண்டு
படிப்பினிலே கவனமுடன் விகசிப்பாகி
வல்லமையாய் வளர்ச்சிதனை சிறகாய் ஆக்கி
வானளவாய் சாதனைகள் சிறந்து நிற்க
கல்வியிலே கலாநிதியாய் பட்டம் பெற்றஎம்
ஹம்சாவை வாழ்த்துவதில் பெருமை கொள்வோம்...

உசன் ஸ்ரீகந்தசாமிகோயில் ஆலயகுருவான "அருள்வாக்குச் சித்தர்" **சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள்**, திருமதி **கனகாம்பிகை** தம்பதியினரின் புதல்வியும் கைதடி கயிற்றசிட்டி முருகன் ஆலய பிரதமகுரு **சிவஸ்ரீ கணேசக் குருக்கள்**, திருமதி **சுசிலா தேவி** தம்பதிகளது மருமகளுமான **ஸ்ரீமதி ஹம்சினி ராஜாராம் சர்மா** அவர்கள் Sheffield Hallam (UK) பல்கலைக் கழகத்தில் மென்பொருள் பொறியியலில் இளமாணி (சிறப்பு) பட்டம் பெற்று பின்னர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உயிர்தகவ்லியலில் முதுமாணிப் பட்டத்தினைப் பெற்று இப்போது அயர்லாந்தில் டப்ளின் சிட்டி (DCU) பல்கலைக் கழகத்தில் புலமைப்பரிசில் ஊடாக தனது கலாநிதிப்பட்ட ஆய்வினை மிகச்சிறப்பாக நிறைவு செய்துள்ளார். இந்த ஆராய்ச்சி மருத்துவ சாதன மென்பொருளின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாகும். பல சர்வதேசமாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதி வாசித்தளித்துள்ளார். இவர் அமெரிக்க FDA உடன் இணைந்து மருத்துவ மென்பொருளுக்கான ஒரு சர்வதேசதர நிலை நியமத்தினை உருவாக்குவதில் பங்கேற்றதன் மூலம் அந்நியமத்தின் உறுப்பினராகவும் இணைக்கப்பட்டமையும் சிறப்புக்குரியதாகும். அவ்வகையில் கலாநிதிப்பட்டம் பெறும் ஹம்சினியை எல்லாம் வல்ல உசன் முருகன் இறையாசியோடும் இணுவை சிவகாமி அம்மன் திருவருளோடும் வாழ்த்துவதில் நாங்கள் பெருமகிழ்வடைகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-

சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
பிரதம குரு சிவகாமி அம்மன் [illegible]
ஸ்ரீமதி வடிவாம்பிகை, [illegible]

(CS/29291) J-1

## மணமகன் தேவை

1995, இந்து, ரோஹினி, TEACHER
பூர்வீகம் - கிளிநொச்சி, வதியுமிடம் - யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 11215.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29285A) J-1

## காணி விற்பனைக்கு

மருதனார் மடம் உரும்பிராய் வீதி -2, 1 3/4 பரப்பு.
1 பரப்பு -40 லட்சம்.
திருநெல்வேலி நாவலடி வீதி- 1 பரப்பு 5.36 குளி
தொடர்புகளுக்கு:
**077 104 8865**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மல்லாகம் KKS Road இல் அமைந்துள்ள ஒழுங்கையில் 2.5 பரப்புக் காணி இரண்டாவது வீடு 3 அறைகள், குளியலறை, சமையல் அறை, இதர வசதிகளுடன்விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
**076 744 8099**

## வீட்டு வேலையாள் தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு பராமரிப்பு வேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 298 7506**

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு:
**077 986 6032**

## மணமகள் தேவை

1991, இந்து, ஆயிலியம், ACCOUNTANT
பூர்வீகம் - புலோலி, வதியுமிடம் - UK
மணமகன் பதிவு இல: 11154.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com
(CS/29285B) J-1

## அலுவலகக் கட்டடம் வாடகைக்குத் தேவை

கொக்குவில், கோண்டாவில் பகுதியில் காங்கேசன்துறை வீதிக்கு அண்மையாக 20 ஊழியர்கள் கொண்ட கணினி நிறுவனம் ஒன்றிற்கு வாகனத் தரிப்பிடத்துடன் அலுவலக இடம் வாடகைக்குத் தேவை
தொடர்புகளுக்கு:
**077 3163 530**

## Vacancy for Software Developer

A USA-based company with an office in Jaffna is looking for candidates for the post of Web Application Developer to work at the Jaffna office.

Qualifications:
- Degree in Computing / IT or equivalent experience.
- Good knowledge of programming.
- Knowledge in Database Management Systems.
- Knowledge in Linux and server administration is a plus.

Send your CV to : **siva@monthlywarranty.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பொன் சூலம்; காரைநகரில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 24
காரைநகரில் அமைந்துள்ள ஆலயம் ஒன்றில் ஐம்பொன் சூலம் திருட்டு போயுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர் அல்லின் வீதி காமாட்சி கேணி வைரவர் ஆலயத்திலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தில் புனரமைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று ஆலய கும்பாபிஷேகம் நடக்கவிருந்த நிலையில் குறித்த சூலம் திருட்டு போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச-125)

**உடனடி வேலைவாய்ப்பு**

பிரபல்யமான கம்பனிக்கு வட மாகாணம் முழுவதும்
(வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார்,
யாழ்ப்பாணம்) முகாமையாளர்கள் அலுவலகம்
உத்தியோகத்தர்கள்

தொடர்பு: **076 112 4145**

# அரச கொள்கையில் பாகுபாடு கிடையாது

## பிமல் ரத்நாயக்க விளக்கம்

கொழும்பு, நவ. 24
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்தவொரு சமூகத்தையும் அவர்களின் மத அல்லது கலாசார நடைமுறைகளின் அடிப்படையில் ஒருபோதும் பாகுபாடு காட்டாது. அரசாங்கத்தின் கொள்கையில் அது இல்லை.

-இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் அமைச்சரவையில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லாமை தொடர்பில் எழுந்துள்ள விமர்சனங்களுக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.

எமது அரசாங்கம் இலங்கையர்களை உள்ளடக்கிய ஓர் அரசாங்கம். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற மத ரீதியான அடையாளங்களைக் கொண்டிருக்கவில்லை.

மத, கலாசார வேறுபாடுகளை மறந்து ஒரே நாடாக வாக்களித்து பெரும்பான்மை ஆட்சியைத் தேர்ந்தெடுப்பது இதுவே முதல் முறை.

இங்கு பாரபட்சம் காட்டுவதற்கு எதுவும் இல்லை. மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை**

பூந்தோட்டம் ஒன்றைப் பராமரிப்பதற்கு ஆர்வமும் விருப்பமும் புத்தாக்க சிந்தனையும் உள்ள பணியாளர்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேரில் சமுகமளிக்கவும்.
இல. 105 இராஜபாத வீதி,
கோப்பாய்.


**கணக்காளர் தேவை**

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணக்காளர் அல்லது கணக்காளருக்கு உதவியாகப் பணியாற்றக் கூடியவர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
நேரில் சமூகமளிக்கவும்.

தொடர்புக்கு
இல. 105 இராஜபாத வீதி,
கோப்பாய்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 01 . 1954



இறப்பு 22 . 11 . 2024

### வேலாயுதம் யுவராஜன்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் யுவராஜன் அவர்கள் நேற்றுமுன்தினம் (22.11.2024) வெள்ளிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா வேலாயுதம் (பிரதம சிறாப்பர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) - சீதாதேவி தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், பவானியின் அன்புக் கணவரும், கவித்திரா (கனடா), கேசவன் (கனடா), அபினாஸ் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வட்ரீசன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், கோடிஸ்வரன் (கனடா) அன்புப் பேரனும், ஜெயந்தி (கொழும்பு), சாந்தி (கொழும்பு), லிங்கராஜன் (பிரான்ஸ்), வேல்ராஜன் (கருணா - கனடா), ஆனந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், லக்ஸ்மன்திசா (கொழும்பு), ஜெகதீஸ்வரன் (கொழும்பு), சாந்தினி (கனடா), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.11.2024) வியாழக்கிழமை கனடாவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
சகாதேவன் (மாமன்)
076 756 1049

கொக்குவில். (CS/56754) J-1

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன் (நாதண்ணா)



அல்வாய் கிழக்கு பத்தானையைப் பிறப்பிடமாகவும் இலகடி மற்றும் பத்தானையை வதிவிடமாகவும் கொண்டிருந்த சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன் (நாதண்ணா) (முன்னாள் மாயவன் பல்பொருள் வாணிப உரிமையாளர் நெல்லியடி) நேற்று முன்தினம் (22.11.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சிதம்பரப்பிள்ளை-செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் அமரர்களான மாணிக்கம்-நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் கருணாதேவி (கருணா) இன் பாசமிகு கணவரும் தனேந்திரன் (கண்ணன்-கனடா), சபேசன் (சாந்தன்-சுவிஸ்) குணேந்திரன் (கோபி தையலகம் மாலு சந்தி), தாட்சாயினி (ஆசிரியர் மு/பாரதி ம.வி), ஜெயராம் (ராம்குட்டி-ஆசிரியர் மல்லாவி ஜயன்கன் குளம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யாழினி (கனடா), கேசிகா (இலங்கை), சசிரேகா (ரேகா-சுவிஸ்), பிரேமநாத் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனும் அனிக்கா, அனன்யா (கனடா) வாசனா, விதுர்சனா (இலங்கை) அஹானா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் பத்தானை அல்வாயில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காலை 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
தாட்சா (மகள்) - 077 758 6094
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கயிலைநாதன் சிந்துஜன்



கயிலைநாதன் சிந்துஜன் அவர்கள் நேற்று சனிக்கிழமை 23.11.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில், 9/7 அன்னசத்திரலேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
076 647 6157
021 222 9341
(CS 1928) V-1
குடும்பத்தினர்.

# குருபூசை!

யாழ்ப்பாணம், நவ.24
வியாபாரிமூலை திருவருள்மிகு அருளம்பல சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு 108 கலச சங்காபிஷேகம் வைத்து விசேட பூசை வழிபாடுகள் பருத்தித்துறை, வியாபாரிமூலையில் அமைந்துள்ள அருளம்பல சித்தர் சமாதி ஆலயத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (ரி-45-100)

# பண்டிகைக் காலத்தில் திடீர் சோதனைகள்

கொழும்பு, நவ.24
எதிர்வரும் பண்டிகைக் காலத்தை இலக்காகக் கொண்டு நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

தற்போதைய சுற்றிவளைப்புகளுக்காக, மேலதிகமாக விசேட அதிரடிப்படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை இந்தச் சோதனைகள் தொடரும்.

பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளைக் காட்சிப்படுத்துவதில் விசேட அவதானத்துடன் சோதனைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அஸ்வெசும' 2 ஆம் கட்டம்; விண்ணப்பகாலம் நீடிப்பு

கொழும்பு. நவ.24

'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்துக்கான இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் நாளை 25 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை தத்தமது பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும்.

ஏற்கனவே நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு பெறுகின்ற அல்லது தகுதி பெற்றோர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பயன் பெறுநர்கள், ஏற்கனவே தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தகுதிபெற்ற பயனாளிகள், பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படாத போதிலும் சமூகப் பாதுகாப்புத் தகவல் முறைமையில் தகவல் காணப்படுகின்ற நபர் அல்லது குடும்பத்தினர் அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, பொய்யான அல்லது பிழையான தகவலை வழங்கும் விண்ணப்பதாரி நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்கு விசாரணையில் குற்றவாளியாக இனம் காணப்பட்டால் சிறைத் தண்டனைக்கும், தண்டப்பணம் செலுத்துவதற்கும் ஆளாக நேரிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 66,9)


## டுபாய் வைத்தியசாலை வேலைவாய்ப்பு

| வேலை விபரம் | அளவு | சம்பளம் AED |
|---|---|---|
| இலெக்ரீஷியன் (Electrician) | 100 | 1300-1500 |
| HVAC டெக்னீஷியன் (HVAC Technicians) | 100 | 1500 |
| ப்ளம்பர்ஸ் (Plumbers) | 50 | 1500-1700 |
| ELV/LV டெக்னீஷியன் (ELV/LV Technicians) | 30 | 1400 |
| SAFETY அதிகாரி (Safety Officers) | 15 | 2000 |
| வைத்தியசாலை இயந்திர திருத்துநர் (Hospital Machinery Mechanic) | 25 | 1500-1700 |
| பெயின்டர்ஸ் (Painters) | 40 | 1300 |
| Lift டெக்னீஷியன் (Lift Technicians) | 30 | 1500-1700 |
| Boiler டெக்னீஷியன் (Boiler Technicians) | 30 | 1500 |

1 AED - Rs.79.55 as of 18.11.2024

நிபந்தனை

- உணவிற்கு 300 AED வழங்கப்படும்
- தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
- 02 வருட ஒப்பந்தம், 08 மணித்தியாலம் வேலை.
- ஒருவழி பயண டிக்கட் வழங்கப்படும்.
- ஏனைய நிபந்தனைகள் UAE சட்டத்திற்கு அமைவானது.

CV collection only.
No charges for CV.
Passport not collected.

AL/0701/ADVT/14/24

**தனா மேன்பவர் (பி) லிமிட்டட்**

104, செட்டியார் தெரு, கொழும்பு-11. (கோல்ட் சென்டர் அருகில்)
Office: 0112 439 189 / 0112 335 100
Mob: 076 740 3832 / 070 5210021 / 072 2728015 | What's app: 076 740 3832
Email: danamanpower@yahoo.com

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நல்லூர் கோயிலுக்கு அருகாமையில் பாதுகாப்பான சூழலில் பெரிய வீடொன்று வாடகைக்கு உண்டு. ஒரு குடும்பத்திற்கும் அல்லது பல்கலைக்கழக மாணவிகளுக்கும் உகந்தது.

(CR/43751) J-1

தொடர்பு:- 077 609 5896

## கேள்வி மனு கோரல் - 2024

மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு சொந்தமான பாவிக்கப்படாத நிலையில் உள்ள பழைய கட்டடத்தினை இடித்து அகற்றுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ஆர்வம் உள்ளவர்கள் மன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள (நீதி மன்ற கட்டடத்துக்கு அருகாமை) கட்டடத்தினை பார்வையிட்டு மூடிய கேள்விப் பத்திரத்தினை நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.12.2024

அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்
மன்னார் மாவட்ட கூட்டுறவு சபை,
மன்னார்.

தொடர்பு : 077 070 1202

செயலாளர்.

## வீடு வாடகைக்கு

யாழ் இந்துக்கல்லூரிக்கு மிக அருகாமையில் வசதிகளுடன் கூடிய 10 அறைகள் கொண்ட புதிய மேல்மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. நிறுவனங்களாகவோ. மாணவர்கள் தங்கும் விடுதிகளாகவோ. சேமிப்பு களஞ்சியமாகவோ மற்றும் குடும்பமாக வாழ்வதற்கோ உகந்தது.

தொடர்பு: 076 962 8423

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் நீங்கள் மோட்டார் சைக்கிள் வைத்திருந்தால் மாதம் 50,000/- முதல் 150,000/- வரை சம்பாதிக்க முடியும். உடனடியாக எம்முடன் இலவசமாக இணையவும்

தொடர்புகளுக்கு: Call / WhatsApp
077 473 7737

## வாகன சாரதி தேவை

Super Ace VAN இல் Delivery வியாபாரம் செய்வதற்கு வாகன சாரதி தேவை.

முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விவரம்: 077 3363 766
076 2677 434




More information call us
021 7534 807

www.northernuni.lk
VISIT OUR WEBSITE

Kanthamadam Junction,
JAFFNA, NORTHERN PROVINCE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாய்வீரமா? செயல்வீரமா?

இந்தியாவின் இரண்டாவது கோடீஸ்வரராகவும், உலகின் 17ஆவது கோடீஸ்வரராகவும் உள்ள கௌதம் அதானியின், அதானி குழுமத்தின் உலகளாவிய முதலீடுகள் தொடர்பில் அபாய ஒலி எழுப்பப்பட்டுள்ளது. அமெரிக்காவில் காற்றாலை சார் திட்டங்களை ஈர்ப்பதற்காக இந்திய அதிகாரிகளுக்கு 6 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் லஞ்சம் கொடுத்தனர் என்று அமெரிக்க அதிகாரிகளால் அதானி குழுமத்தினருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அத்துடன், அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி உட்பட அந்தக் குழுமத்தின் மேலும் ஆறு பேருக்கு அமெரிக்க நீதிமன்றத்தால் பிடியாணை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.அதானி குழுமத்தின் பிரதான முதலீடுகளில் காற்றாலை சார்ந்த முதலீடுகளுக்கும் முக்கியமான வகிபங்குண்டு. இதை ஓர் உலகளாவிய வர்த்தகமாகவே அந்தக் குழுமத்தினர் மேற்கொண்டு வந்தனர். எனவே, அமெரிக்க நீதிமன்றம் விடுத்த அறிவிப்பைத் தொடர்ந்து, முதல் நாடாக அதானிக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த உரிமத்தை ரத்துச் செய்வதாக கென்யா அறிவித்துள்ளது. அத்துடன், குறிப்பிட்ட காலத்துக்கு அவரின் முதலீடுகள் நாட்டுக்குள் ஏற்கப்படாது என்றும் கென்யா தெரிவித்துள்ளது.

விடயம் என்னவென்றால், அதானி குழுமத்தின் பிரதான செயற்றிட்டப் பகுதிகளில் ஒன்றாக இலங்கையும், அதிலும் குறிப்பாக வடமாகாணமும் காணப்படுகின்றது. 2022ஆம் ஆண்டு ஜனாதிபதியாக கோத்தாபய பதவி வகித்த காலத்தில் அதானியின் முதலீடுகளுக்கான உரிமம் வழங்கப்பட்டது. ஆனால், இந்த உரிமம் ஒழுங்கு முறைப்படிதான் வழங்கப்பட்டதா என்ற சந்தேகம் அன்றே உருவாக்கப்பட்டது. அப்போதைய எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தற்போதைய ஜனாதிபதி அநுரதான், அதானியின் காற்றாலைக்கான உரிமம் உரிய முறைப்படி பெற்றுக் கொள்ளப்படவில்லை என்ற முறைப்பாட்டை முதன் முதலாகவும், மிகப்பெரியளவிலும் முன்வைத்தவராகக் காணப்படுகின்றார்.

ஆதலால், தற்போது உலகளாவிய ஊழலாக விரிந்துள்ள அதானியின் காற்றாலை முதலீடுகள் தொடர்பில் அநுர அரசாங்கம் மிகத்தீவிரமான புலன் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். ஊழலுக்கு எதிராக நெஞ்சை நிமிர்த்தும் திடமான தைரியம் உண்டெனில், அநுர அரசாங்கம் அதானியின் முறைகேடுகள் தொடர்பில் வெளிப்படையான அறிவிப்பொன்றை உடனடியாக விடுக்க வேண்டும். 'குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரை, அதானி குழுமத்தினர் சுற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள்' என்பதுதான் நியூயோர்க் நகர நீதிமன்றத்தின் கருத்தாக உள்ளது. எனவே, கென்யா அளவுக்கு அவசரம் தேவையில்லையாயினும், பட்டவர்த்தன அறிக்கையொன்று மிக அவசியமே.

'ஊழலுக்கு எதிரான அரசாங்கம்' என்பதை தேசிய தொனிப்பொருளாக்கி ஆட்சிப்பீடம் ஏறிய அநுர அரசாங்கத்துக்கு, தற்போது ஒரு மோசடியை முற்றாக முறியடிக்கும் வாய்ப்பு அகலத் திறந்துள்ளது. அநுர வாய்ச்சொல் வீரரா? அல்லது செயல் வீரரா? என்பதெல்லாம் இன்னும் கொஞ்சநாளில் தெரிந்துவிடும். அதற்கான 'சர்வதேசச் சாட்சியம்'தான் இந்த விவகாரம்.




வடக்கு மாகாணத்தில்

## இடர் அபாயங்களை அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்!

யாழ்ப்பாணம், நவ.24

**மழையுடனான காலநிலை இடர்நிலைமைகளின் போது பொதுமக்கள் இடர்முகாமைத்துவப் பிரிவின் 117 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.**

மேலும் யாழ்.மாவட்டத்தில் வெள்ள இடர்நிலைமைகளால் பாதிக்கப்படும் மக்கள் 02122 21676, 0773957894 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 021228 5330, 0772320528 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 0212290054 எனும் தொலைபேசி இலக்கத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் 0232117117 எனும் தொலைபேசி இலக்கத்துக்கும், வவுனியா மாவட்டத்தில் 0760994883 எனும் தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-66)

இலஞ்சக் குற்றச்சாட்டு

## 10 மாதங்களில் 73 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 24

கடந்த 10 மாதங்களில் இலஞ்சம் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் 73 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு தலைமை பொலிஸ் ஆய்வாளர், இரண்டு பொலிஸ் ஆய்வாளர்கள், ஒரு சப்இன்ஸ்பெக்டர், எட்டு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் ஒன்பது சார்ஜென்ட்கள் உட்பட 21 பொலிஸ் அதிகாரிகள் அடங்குகின்றனர்.

மேலும், 24 பொதுமக்களும், மூன்று கிராம உத்தியோகத்தர்களும், பாடசாலை அதிபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## கனடாவில் ஈழத்தமிழர் குத்திக்கொலை

கொழும்பு, நவ. 24


கனடாவில் ஈழத்தமிழர் ஒருவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளதாக ரொரன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், பகுதியைச் சொந்த இடமாக கொண்ட 66 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஸ்காபுரே பகுதியிலுள்ள அவரது வீட்டில் வைத்து குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் 32 வயதான மகன் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அர்ச்சுனா மீது வழக்குப் பதிவு



கொழும்பு, நவ. 24

நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட அர்ச்சுனா இராமநாதனுக்கு எதிராக சிவில் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

சமூக வலைத்தளத்தில் அவர் வெளியிட்ட காணொலி அறிக்கையை விசாரிப்பதற்காக சிவில் ஆர்வலர்கள் இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளனர். (ச-இ)

## வடக்கு, கிழக்குக்கு சீனா நிதியுதவி

யாழ்ப்பாணம், நவ. 24

சீனா வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு 1.5 பில்லியன் பெறுமதியான உதவித்திட்டங்களை வழங்கியுள்ளதாக சீனத்தூதுவர் தெரிவித்துள்ளார். இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே அவர் இந்த உதவிகளை வழங்கியுள்ளார். சீனாவின் உதவி வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தொடர்ச்சியாக கிடைக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

### நாளை

25.11.2024

திங்கட்கிழமை - கார்த்திகை - 10

சுபநேரம் : 12.12 - 01.42

ராகுகாலம் : 07.42 -09.12

### நாளொரு நல்வார்த்தை

குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்.

-தியோடர் ரூஸ்வெல்ற்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலற்ற ஆட்சி ஜப்பான் ஆதரவு

கொழும்பு, நவ. 24
இலங்கையில் ஊழலற்ற ஆட்சியைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி அநுரவின் முயற்சிக்குப் பாராட்டுத் தெரிவிப்பதாக ஜப்பானியத் தூதுவர் அகியோ இசோமடா தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமாரவின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவுக்கும் ஜப்பானியத் தூதுவர் அகியோ இசோமடாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று, ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது. இதன்போதே, அவர் ஊழலற்ற அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.
வீண் விரயம், ஊழல் மோசடியற்ற நாட்டை உருவாக்கி பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்லும் புதிய கொள்கைக்கு ஜப்பான் அரசாங்கத்தின் பாராட்டுகளைத் தெரிவித்த தூதுவர் அகியோ இசோமடா, இலங்கையின் புதிய அரசாங்கத்துக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவுக்கும் மிகச் சிறந்த ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடம் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



கார்த்திகை மரநடுகை மாதத்தை முன்னிட்டு கொமர்ஷல் வங்கி பருத்தித்துறை கிளையினரால் பயன் தரு மரக்கன்றுகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ச-45-100)




# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பு என்மீதான வீண்பழியே!

## பிள்ளையான் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 24
கோத்தாபய ராஜபக்சவை ஆட்சியில் அமர்த்துவதற்காக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும், நான் சிறைச்சாலையிலிருந்து கொண்டு சதித்திட்டம் தீட்டியதாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலமளிப்பதற்காக முன்னிலையானபோது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
உண்மையில் 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்றதன் பின்னர் 2018இல் நடத்தப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவே வெற்றி பெற்றது. ஆனால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் 2019ஆம் ஆண்டு தான் மேற்கொள்ளப்பட்டன. நல்லாட்சி அரசாங்கத்தை 2018ஆம் ஆண்டே மக்கள் புறக்கணித்துவிட்டனர்.
அந்தவகையில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக யாரை நியமித்திருந்தாலும் அவர் வெற்றி பெற்றிருப்பார். மக்களின் மனநிலை அவ்வாறு தான் காணப்பட்டது. எனவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களுடன் இதனைத் தொடர்புபடுத்துவது அடிப்படையற்றது.
எனக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை கண்டறிய வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் - என்றார். (ச-இ)

# கோப், கோபா தலைமையை எதிர்க்கட்சிக்கு வழங்குங்கள்




யாழ்ப்பாணம், நவ.24
நாடாளுமன்றத்தில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவிகளுக்கு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதான குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அதன்படி கோப், கோபா மற்றும் அரச நிதி தொடர்பான குழுக்களின் தலைமைப்பதவியை தமது அணிக்கு வழங்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.
சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக பண்புகளை இந்த அரசாங்கம் மதிக்கின்றதெனில், நாடாளுமன்றக் குழுக்களின் தலைமைப்பதவி எதிரணிகளுக்கு வழங்கப்படுவதே சிறப்பாக அமையும் எனவும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் பிரதமர் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு எதிரணிகள் கூட்டாக மனுவொன்றை கையளிக்கத் திட்ட மிட்டுள்ளன. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# நல்லூரில் முதலை உயிருடன் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 24

யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள மூத்த விநாயகர் கோவிலுக்கு அண்மையில் 8 அடி நீளமான முதலை ஒன்று பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியிலுள்ள வீடு ஒன்றின் முன்பாக முதலை உயிருடன் இருப்பதை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்தனர். அதனையடுத்து அந்தப் பகுதிக்கு விரைந்த வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் முதலையை உயிருடன் பிடித்துச் சென்றனர்.

மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக அருகில் உள்ள நீர்நிலைகளில் இருந்து குறித்த முதலை ஊருக்குள் வந்திருக்கலாம் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

(ச-26,125,66)




உருத்திரபுரம் பங்கு இளையோர் நடத்தும் இரத்த தான முகாம் புனித பற்றிமா அன்னை ஆலயத்தில் கடந்தஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திரு கந்தையா இராஜரட்ணம்

**(ஓய்வுபெற்ற பொறியியலாளர் (தேம்ஸ் வோட்டர் லிமிட்டட்)**



காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், லண்டன் கரோவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராஜரட்ணம் அவர்கள் கடந்த 14.11.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகேந்திரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வைத்திலிங்கம் (வேம்படி முத்தையா), பொன்னம்மா தம்பதியரின் அருமை பெறாமகனும், செல்வமலர் அவர்களின் அன்புக் கணவரும், சாந்தி, சிவகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கிஷோகுமார், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சவிதா, தினேஸ், பிரவீன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற செல்வராசா (இலங்கை) மற்றும் சரஸ்வதி (இலங்கை), துரைராசா (லண்டன்), ஜெயசோதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லோகேந்திரன் (மலேசியா), லோகேஸ்வரி (மலேசியா), மாணிக்கவாசகர் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற இராஜரட்ணம் (மலேசியா) மற்றும் கனகேஸ்வரி (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான தர்மபாலன் (இலங்கை), பாக்கியலட்சுமி (இலங்கை) மற்றும் ஜெயந்திரன் (அவுஸ்திரேலியா), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றுமுன்தினம் (22.11.2024) வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 8மணி வரை Divinity Funeral Care, 209 Kenton Road, Harrow, HA3 0HD ல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியை இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2.45 மணி வரை Hendon Crematorium, Holders Hill Road, London, NW7 1NB ல் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 03.03.1945 — மறைவு 14.11.2024

**தகவல்: கந்தையா குடும்பம்**

**விமலசாந்தன் - 077 411 5335 (இலங்கை)**

(CS/56731) J-1

# மரண அறிவித்தல்

## கனகசபை குணரத்தினம்



யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை குணரத்தினம் நேற்றுமுன்தினம் (22.11.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - தங்கச்சியம்மா தம்பதியரின் மகனும், கந்தையா - மீனாட்சி தம்பதியரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகப்பிரியா, ஐங்கரன், கிரிதரன், கங்காதரன், சத்தியப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜந்தன், பிரகாசினி, விந்தியா, தர்சிகா, பிரகாஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷேக், அக்ஷயா, அக்ஷயன், இலக்கியா, சாதனா, ஆராதனா, தன்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்செழு விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 28.11.1954 — இறப்பு 22.11.2024

மயிலங்காடு றோட்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

**தகவல்:**

**குடும்பத்தினர்.**

**077 623 2025**
**077 579 8572**

(CS/29288) N-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 20 • 08 • 1950

மறைவு 22 • 11 • 2024

## தருமராசா கனகலெட்சுமி (சுக்குட்டியம்மா)

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தருமராசா கனகலெட்சுமி (சுக்குட்டியம்மா) நேற்றுமுன்தினம் (22.11.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பி - நாகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தருமராசாவின் பாசமிகு மனைவியும், சந்தானலெட்சுமி (புஷ்பம்), காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் கலாநிதி (ஜேர்மனி), விமலநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரியும், கலாதரனின் (தரன் - பிரான்ஸ்) பாசமிகு தாயாரும், தமிழ்செல்வியின் அன்பு மாமியாரும், அஸ்வின், ஆருஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம்,**
**மண்டைதீவு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**கலாதரன்** (மகன் - பிரான்ஸ்)

(CS/29290) N-1


### இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவு செய்ய முடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.innaipa.com

### வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு:
**077 077 6469, 077 494 9683**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சின்னத்தம்பி**
## மகேந்திரராசா (சந்திரன்)

(ஓய்வுபெற்ற காசாளர் - கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)

**திதி – நவமி (24.11.2024)**

தோற்றம் 05 • 12 • 1967

மறைவு 06 • 12 • 2023

அன்பின் திருவுருவாய் அகத்தின் ஒளிவிளக்கே - தெய்வமே
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஆண்டு ஒன்று ஆனபோதும்
உமை நாங்கள் இழந்த துயரை ஈடு செய்யமுடியாமல் தவிக்கின்றோம்.
கண்முன்னே நீங்கள் வாழ்ந்த காலம் கனவாகிப் போனதுவோ!

நீங்கள் எம்மை ஒரு நிமிடம் காணாவிட்டால் பதை பதைத்த
நினைவுகளை இன்னும் கண்ணீர் விழி நனைக்குதைய்யா


எம்மை எல்லாம் அன்பால் அரவணைத்து பண்பால் வழி நடத்திய
அந்த நாட்கள் எம்மை விட்டு நீண்ட தூரம் சென்றாலும் - நீங்கள்
மாறாது ஒரு போதும் உம் கொள்கை நம் வாழ்விலும் என்றும் மறையாது
உங்கள் நினைவும் எம் மனதை விட்டு நீங்காது தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சூசையப்பர் கோவிலடி,**
**கோப்பாய் மத்தி.**

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**மனைவி**

(cs 56698) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 • 08 • 1943

மறைவு 23 • 11 • 2024

## திரு செல்லத்துரை கனகலிங்கம்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் GPS வீதி கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கனகலிங்கம் நேற்று (23.11.2024) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை-இராசம்மா தம்பதியின் அன்பு மகனும் கனகசுந்தரம்-நல்லம்மா தம்பதியின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும், கவிதா, வைகுந்தவாசன், வனிதா, ஜெயதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார், மதிசுதன், அனுசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, சந்தியா, யஸ்வந்த், வைஷ்ணவன், வைஷ்ணவி, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும் வீரலட்சுமி, அமிர்தலிங்கம், சிவலிங்கம், இளமுருகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் G.P.S வீதி கல்வியங்காட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் நாரந்தனை புன்னம்பிட்டி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# ஆண்டொன்று சென்றதுவோ ஐயனே!



பிறப்பு 28 • 04 • 1939

இறப்பு 06 • 12 • 2023

## அமரர் பொன்னுத்துரை மகேசலிங்கம்

(மார்கழி மாத வளர்பிறை நவமி)

ஆராத பாசமுடன் அன்பு ஓங்க
அவனியிலே குடும்பத்தை பேணிக் காத்து
சீராக சமயநெறி சிறந்த சேவை
சீர்மியமாய் உறவுகள் நட்பை ஓம்பி
பேராக வாழ்ந்தவெங்கள் பெரு மகனார்
பிரிந்தின்று ஆண்டு ஒன்று ஆனதுவோ
வாராத இடர் தம்மால் வாடுகின்றோம்
வனப்புடனே இறையடியில் சாந்தி கொள்க

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**826 / 14 ஏ, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

(cs 1908) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது ஆண்டில் யாழ்அருவி YALL Aruvi
## 2004 - 2024

**கடந்த 20 வருடங்களாக எமக்கு பலமாகவும், யாழருவியுடன் இணைந்து பயணிக்கும் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.**
**நன்றி மட்டும் போதுமா?**

**கடந்த காலங்களில் அனைத்து அனர்தங்களில் இருந்தும் எமது தாயக மக்கள் மீள்வர நாமும், எமது நிறுவனமும் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களை மேற்கொண்டது போல் இனிவரும் காலங்களில் எமது மக்களின் சமூக பொருளாதார அறிவியல் முன்னேற்றத்திற்கான எமது செயற்பாடுகள் தொடரும்**





### வாழ்த்துச் செய்தி



வட மாகாணத்தில், முதல் குடிநீர் சுத்திகரிக்கும் நிறுவனமாக 2004 நவம்பர் 24 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சுவிஸ் மினரல் எனும் "யாழருவி" குடிநீர் உற்பத்தி நிறுவனம் பல்வேறு தடைகளைத் தாண்டி 20 ஆவது வருடத்தில் கால்பதிப்பதை யிட்டு அந் நிறுவனத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழருவி நிறுவனமானது தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் அனைத்திலும் சமூக அறிவியல் பொருளாதார முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் பங்காற்றி வருவதுடன் அப் பிரதேசங்களில் வாழும் வறிய மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்களையும் வழங்கிவருவது பாராட்டத்தக்கது.மேலும் எதிர்காலத் தில் எமது பிரதேசத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் வகையிலும் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தி எமது பிரதேசங்களை பொருளாதார ரீதியில் பலப்படுத்தும் வகையிலும் இந்நிறுவனம் செயற்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.அவ் வகையில் கடந்த பல ஆண்டுகளாக எமது மண்ணிற்கும் மக்களுக்கும் "யாழருவி" நிறுவனம் ஆற்றி வரும் சேவையை பாராட்டுவதோடு எதிர் காலத்தில் இன்னும் பல முன்னேற்றகரமான அபிவிருத்தித் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும் என வேண்டி வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**நா. வேதநாயகன்**
**ஆளுநர், வட மாகாணம்.**




### சிறந்த நிர்வாகிகள்








கடந்த காலங்களில் மிக சிறப்பாக பணியாற்றியமைக்கான சிறந்த பணியாளர் 2024 விருதினை பெறுபவர்களின் விபரங்கள்.
திரு.சி.மதுசூதனன் (சிறந்த விற்பனையாளர்) செல்வி பிரதீபா (சிறந்த உற்பத்தியாளர்) செல்வி திலகா (விரைவான செயற்பாட்டாளர்)

பல்வேறு கால கட்டங்களில் எமது நிறுவனம் எதிர்கொண்டு அனைத்து தடைகளையும் தாண்டி கடந்த 20 வருடங்களாக எமது நிறுவனம் தொடர்ச்சியாக வெற்றிகரமான பாதையில் பயணிப்பதற்கு பக்கபலமாக செயல்படும் சிறந்த நேர்மையான அரச அதிகாரிகளுக்கும்,எமது நிறுவன நிர்வாகிகளுக்கும், அனைத்து பணியாளர்களுக்கும், எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்காலத்திலும் உங்கள் ஆதரவுடன் எமது பொருண்மிய செயற்பாடுகள் தொடரும்.

**இவ்வண்ணம்**
**சி.பிரபாகரன்.**

# YALL Aruvi

**International standards are now available**
**are now available in your area.**
**சர்வதேச தரத்தில் உங்கள் ஊரிலும் கிடைக்கின்றது**




**Manufacturer & Distributer**
**Global Business Network**
**Sirupiddy West Jaffna.**
**074 042 81 22**
**076 299 27 60**
**infoyallaruvi@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 01 . 1945



மறைவு 06 . 12 . 2023

### அமரர் மாணிக்கம் உதயகுமார்

(ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர்)

நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ !
உங்களை நினைத்து தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - அப்பா உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய தில்லையம்பதி
சிவகாமி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

அன்னங்கை,
உரும்பிராய் மேற்கு.

உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(CS/56744) J-1


# தவறிழைத்தவர்களை தண்டிக்கவேண்டும்!

## சட்டத்தரணி சுகாஷ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.24

மன்னாரில் உயிரிழந்த தாய் மற்றும் சிசுவின் மரணத்துக்கான உண்மையான காரணங்கள் கண்டறியப்பட்டுத் தவறுகள் நடைபெற்றிருக்குமாயின் தவறிழைத்தவர்களுக்குத் தண்டனையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் வழங்கப்படவேண்டும் -இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

மருத்துவத் தவறுகளால் எம்மவர்களின் உயிர்கள் அநியாயமாகக் காவுகொள்ளப்படுவதை சகித்துக் கொள்ளமுடியாது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரசவத்திற்காக இளம் தாயொருவர் மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையில் மகப்பேற்று விடுதியில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சையின் போது தாயும் சேயும் உயிரிழந்தனர்.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்ப்பற்ற விசாரணை மேற்கொண்டு தவறிழைத்தவர்களுக்கு தண்டனையளிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 66)


**வீடு வாடகைக்கு**

யாழ். கந்தர்மடத்தில் வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 253 0865

**வீடு விற்பனைக்கு**

வேம்படி வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு. (பின்புறம் சிறு வைரவர் கோயில் உள்ளது)

தொடர்புகளுக்கு:
077 160 6036

**காணி விற்பனைக்கு**

(நிலப்பரப்பு)

மருதனார்மடம் சந்திக்கு மிக அருகாமையில் காபெற் வீதியை முகப்பாகக் கொண்ட 1 1/2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட வணிக மற்றும் வீடு கட்டுவதற்கான காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 132 9682


## ஆசிரியர்தின நிகழ்வும் பயிற்சி வழங்கலும்

யாழ்., நவ,24

யாழ்.சாள்ஸ் பொறோமியோ நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் தனியார் கல்வி நிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான ஆசிரியர் தின நிகழ்வும், பயிற்சி வழங்கும் நிகழ்வும் யாழ்.வை.எம்.சி.ஏ.கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் எஸ். சிவகாந்தி, யாழ்.மரியாள் வித்தியாலய அதிபர் ஏ.கெனத்மேரியன் ஆகியோர் விரிவுரையாளர்களாக கலந்து கொண்டு விரிவுரையாற்றினர். (ச-25, 63)


## மரண அறிவித்தல்

மண்ணில் 13 . 06 . 1970



விண்ணில் 21 . 11 . 2024

### வேலாயுதபிள்ளை சிவராஜன்

கொடிகாமம் மடத்தடி வீதியைப் பிறப்பிடமாகவும், மாசேரி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சிவராஜன் அவர்கள் கடந்த (21.11.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை அதிபர்) - விசாலாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அம்பலவாணர் - லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், கிரிஜா (முன்பள்ளி ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், பிரணவி (யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவி), பிருஷா (யா/ இடைக்குறிச்சி சுப்பிரமணியம் வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாகரன், சிவடர்சன், சிவகுலேந்திரா, சிவாஜினி, சிந்துஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருந்தவசெல்வி, இராஜரூபி சுஜர்ஷன், இளங்குமரன், கிருபாகரன் - நந்தினி, அருளானந்தம் - கிருபாஜினி, ரமேஷ் - கிருஷ்ணலேகா, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கப்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

மாசேரி, வரணி (CS/29287) J-1 077 077 8349, 077 661 0752



## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1940



மறைவு 22 . 11 . 2024

### ஆறுமுகம் தேவராசா

(வர்த்தக திணைக்களம் - Marketing Department)

காரைநகர் மல்லிகையை பிறப்பிடமாகவும் சயம்பு வீதியை வதிவிடமாகாவும் கொண்ட ஆறுமுகம் தேவராசா (Marketing Department) அவர்கள் கடந்த 22.11.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தையல்முத்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், நேசரத்தினத்தின் அன்புக் கணவரும், திருநாவுக்கரசுவின் (பரமு - தபால் ஊழியர்) சகோதரனும், சத்தியானந்தன் (ஆசிரியர், யா/காரை மெய்கண்டான் வித்தியாலயம்), சத்தியசீலன் (அமெரிக்கா), சத்தியபாமா (கனடா), வேணுகோபாலன், (கூட்டுறவு அபிவிருந்தி உத்தியோகத்தர், AIA Insurance கிளிநொச்சிக் கிளை), சர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தினி (ஆசிரியர், யா/காரை இந்துக் கல்லூரி), கலைமகள் (அமெரிக்கா), நடராஜா (Royal king Restaurant, Amients, Reception Hall கனடா), ஸ்ரெப்நி (அபிவிருத்தி உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம்), கிருசாந்தன் (மலேரியா தடுப்புப் பிரிவு, நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோபிகாந், ஹரிஷ்காந், சாமந்தி, சானுகா, கதிர், வைஷ்ணவி, கேனுயன், திவிகன், சஜிந்தன், தஸ்மிகா, சயிதா, கம்சாயினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 26.11.2024 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 7.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் ஆலங்கன்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
0779103513
0772209611


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாகச் செல்லவும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** ஆனால், குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**சிம்மம் :** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். உற்சாகமாகச் செயல்படுவீர்கள். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உங்களுடைய முயற்சிகளுக்கு குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

**துலாம்:** எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறிக்குப் பிறகுதான் முடியும். அலுவலகத்தில் பணிச்சுமை சற்று அதிகமாக இருக்கும்.

**விருச்சிகம் :** பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்னை ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஒருவர் தேவையை மற்றவர் நிறைவேற்றி மகிழ்வீர்கள். மாலையில் வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறக்கூடும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

**மீனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். அலுவலகத்தில் உங்கள் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்காமல் நீங்களே செய்வது அவசியம்.

## எம்.பி.க்களுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக இதுவரை காலமும் கைத்துப்பாக்கி வழங்கப்பட்டு வந்த நிலையில், அந்தச் சலுகையை நீக்குவது தொடர்பில், கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வரியில்லா வாகன அனுமதிப் பத்திரமும் நீக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-இ)

## மனித...

இலங்கையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை அமெரிக்கா ஏற்றுக்கொண்டு பாராட்டியுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கடந்த கூட்டத்தொடரின்போது முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை நாம் ஏற்கவில்லை. புதிய அரசாங்கமானது தேசிய பொறிமுறை ஊடாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என மனித உரிமைகள் பேரவையிடம் திட்டவட்டமாகத் தெரியப்படுத்தி இருந்தோம். இதனை நாம் செயலில் உறுதிப்படுத்தி வருகின்றோம்.

எவ்வித வன்முறைச் சம்பவங்களும் இன்றி ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எமது அணுகுமுறையை வரவேற்றுள்ளன.

அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் என்னுடன் தொலைபேசி மூலம் சுமார் 15 நிமிடங்கள் பேச்சு நடத்தினார். மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் சாதகமான பிரதிபலிப்பை வெளிப்படுத்தினார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, அடுத்தக்கட்டம் நோக்கி செல்வதற்கும் உள்ளக பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என எமது தரப்பில் அறிவித்தோம். அது தொடர்பில் தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

வடக்கு மக்கள் எமக்கு ஆதரவளித்துள்ளனர். ஒரு நாட்டில் இலங்கையர்களாக முன்னோக்கி செல்வதற்கு அவர்கள் தயாராக உள்ளனர். இனவாதம் மற்றும் மதவாதத்துக்கு இடமளிக்கப் படமாட்டாது என ஜனாதிபதியும் அறிவித்துள்ளார்” - என்றார். (அ-ம-44)

## மோடியுடனான...

பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு வைத்து ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, கடந்த வருடம் தனக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையில் கைச்சாத்தான ஆவணத்தை ஜனாதிபதி அநுர உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நானும் பிரதமர் மோடியும் கைச்சாத்திட்ட தொலைநோக்கு ஆவணத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் எந்தெந்தத் துறைகளில் ஒத்துழைப்பை முன்னெடுக்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, அந்த ஒப்பந்தத்தை ஜனாதிபதி அநுர நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்பாக, இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இந்தியாவில் வைத்து ரணில் வெளிப்படுத்தியுள்ள இந்தக் கருத்துகள் முக்கியம் பெற்றுள்ளன. (அ-ம-இ)

## உள்ளாட்சித்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“உள்ளூராட்சித் தேர்தலை விரைவில் நடத்துமாறு உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. தேர்தலை நடத்துவதற்காக இவ்வருடம் நிதி ஒதுக்கப்படவில்லை. எனவே, அடுத்த வருடம் ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்தவர்களில் சிலர் இறந்துவிட்டனர். மேலும் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். சிலர் அரசியல் ரீதியிலும் மாறியுள்ளனர். எனவே, உள்ளாட்சிமன்றத் தேர்தல் சட்டத்தில் மாற்றம் மேற்கொண்டு வந்து புதிதாக வேட்புமனுக்களைக் கோருவது சம்பந்தமாக நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இதனை செய்ய முடியுமா என்பது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடி வருகின்றோம். அதேவேளை, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு சட்டரீதியில் தடை உள்ளது. பழைய முறையில் அதனை நடத்துவது தொடர்பில் நாடாளுமன்றம் ஊடாக தீர்மானம் எடுக்கவேண்டும்” - என்றார். (அ-ம-44)

## அரசாங்கம்...

தொடர்பான பணியாளர் மட்ட ஒப்பந்தம் கைச்சாத்தாகவுள்ளது என்றும் நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடல்களில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கும், மீளாய்வுக்கும் சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபை அனுமதி வழங்கினால் இலங்கைக்கு 254 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படும். எனவே, அடுத்த வருடத்தின் இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் இந்த நிதியுதவி உதவும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புதிய கடன்மறுசீரமைப்புத் தொடர்பான பேச்சுகளில் அநுர அரசாங்கம் காட்டியுள்ள அக்கறையும் அர்ப்பணிப்பும் பாராட்டப்பட வேண்டியது. அது எமது நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது என்று நாணய நிதியத்தின் பிரதானிகள் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்துத் தெரிவித்துள்ளனர். (அ-ம-இ)

## படுகாயமடைந்த...

நாள்களின் பின்னர் சிகிச்சையின் போது உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியைச் சேர்ந்த கைலைநாதன் சிந்துஜன் (வயது-24) என்ற மாணவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர். பேருந்தில் சென்ற சாரதி உட்பட 36 பேர் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்கள் பதுளை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் படுகாயமடைந்திருந்த ஆறு பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த சிந்துஜன் கடந்த வாரம் பதுளை மருத்துவமனையிலிருந்து இரத்மலானையில் அமைந்துள்ள பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் அவர் சிகிச்சையின் போது நேற்று அதிகாலை 5.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். (அ-ம-26-66)

## வயல்வேலை...

(வயது-39) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், இறப்பு எவ்வாறு சம்பவித்தது என்பது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலியில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ.24

இ.தரணிகன், த.அனித்திரன் மற்றும் தி.மதனபாதம் ஞாபகார்த்தமாக நண்பர்கள் நடத்தும் குருதிக் கொடை முகாம் அச்சுவேலி கலாநிதி அறிவாலய வளாகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. குருதிக் கொடை முகாமில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ரி-66)

# வெங்காயத்துக்கு யாழில் மவுசு

யாழ்ப்பாணம், நவ.24

யாழ். குடாநாட்டில் சின்ன வெங்காயத்துக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. சந்தைகளில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துக் காணப்படுவதோடு, ஒரு கிலோ சின்ன வெங்காயம் 350 ரூபா முதல் 400 ரூபாவரைவிற்கப்படுகின்றது. அதனை விட பெரிய வெங்காயமும் ஒரு கிலோ 350 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-45-17)

## ஒன்றரைக்...

டுள்ளனர். சந்தேகநபர்களில் ஒருவர் சட்டத்தரணியின் வீட்டில் பணியாற்றி வந்த பணிப்பெண் என்றும், அவர் வழங்கிய தகவலுக்கு அமையவே பிரதான சந்தேகநபரால் இந்தத் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரதான சந்தேகநபர் கிளிநொச்சி யில் பதுங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டார். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக, யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத்தியட்சர் எம்.எஸ். ஜரூல் வழிகாட்டலில், யாழ். மாவட்ட குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சமன் பிறேமதிலக தலைமையிலான குழுவினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத் தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மாவீரர்...

கப்டன் மோகன், கப்டன் கில்லி மணாளன் மற்றும் போராளி மணி மேகலை ஆகிய மூன்று மாவீரர்களின் தாயார் பொதுச் சுடரேற்றி அஞ்சலித்தார். சமநேரத்தில் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு அஞ்சலிக்கப்பட்டதுடன் ஒரு நிமிட அகவணக்கமும் நடைபெற்றது. இதன்போது பலரும் கண்ணீர் மல்கத் தமது உறவுகளை நினைந்து அஞ்சலித்தனர்.

1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதிமுதல், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் தாயக மண்ணின் விடியலுக்காக களமாடி வித்தாகிய 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்கள் அங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## ஜெகூவின்...

சுற்றாடல் அமைச்சின் செயலர் எம்.ஜெகூவின் பதவி, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

எனினும் இந்தப் பதவிநீக்கம் குறித்து ஆளுநர் அலுவலகம் எந்த விளக்கத்தையும் வழங்கவில்லைஎன்பதுகுறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

**ENGLISH CLASSES**

**GRADE 6-11**

**(Basic கற்பிக்கப்படும்)**

தொடர்புகளுக்கு:

**077 841 9507**

**வேலையாட்கள் தேவை**

அரியாலையில் இயங்கும் பல்பொருள் அங்காடி (சுப்பர் மார்க்கட்) ஒன்றிற்கு ஆண்,பெண் இருபாலாரும் தேவை. (அரியாலை பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:

**077 540 0425**

**வாடகைக்கு**

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள வீட்டின் பகுதி வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: **077 562 0694**

**கட்டடம் வாடகைக்கு தேவை**

யாழ்நகரை அண்டிய பகுதிகளில் 1500-2000 சதுர அடி கொண்டதும் காமன்ஸ் நடத்துவதற்கு பொருத்தமான சூழல் மற்றும் போக்குவரத்து வசதிகளை கொண்டமைந்ததுமான கட்டடம் வாடகைக்குத் தேவை.

தொடர்பு: WhatsApp **077 364 9897**

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்நகர், சென்ஜோன்ஸ் கல்லூரியை அண்மித்த பகுதிகளில் 5 கி.மீ க்குள் 5 அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளுடன் விசாலமான வளவில் அமைந்துள்ள வீடு வாடகைக்குத் தேவை. தளபாடங்களுடன் இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்பு: WhatsApp **077 364 9897**

**காணி விற்பனைக்கு உண்டு**

நாவற்குழி சந்திக்கு அண்மையில் 4 பரப்புக் காணியும், கோவிலாக்கண்டி சந்திக்கு அண்மையில் 60 பரப்பு நெற் காணியும் (நெற்பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : WhatsApp **077 193 3490**, **077 084 0453**

**கட்டடம் வாடகைக்கு**

யாழ். கஸ்தூரியார் வீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் 10'x35' மற்றும் 25'x35' அளவுகளில் இரு கடைகள் உள்ளன. கொம்பனிகள்/ நிறுவனங்கள்/ காட்சியறை/ வர்த்தகம்/ வியாபாரம் மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்தது.

தொடர்பு:- **077 737 4726**

**பகுதி நேர வேலைவாய்ப்பு**

மாடு வளர்ப்பு, பராமரிப்பு செய்யும் பணியாளர் தேவை

வேலை நேரம்-தினமும் 4 மணி நேரம்

இடம்:-நல்லூர்,யாழ்ப்பாணம் அருகில்

தொடர்பு: **076 676 3012**

**வீட்டு வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டு வேலையாள் தேவை. அனுபவமுள்ள பெண்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.

தொடர்பு:

**077 774 3185**

**ஆண் உதவியாளர் தேவை**

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.

(Sales Assistant / Worker)

சம்பளம் : 60,000

தொடர்புகளுக்கு:

**077 480 3379**

**உதவிக் கணக்காளர்கள் தேவை**

கொழும்பு 13ல் அமைந்திருக்கும் அலுவலகத்திற்கும், யாழ் மாவட்டத்தில் புங்குடுதீவில் அமைந்திருக்கும் எமது இந்து ஆலயத்தின் அலுவலகத்திலும் கணக்கீடு தொடர்பான விடயங்களை மேற்கொள்வதற்கு Quickbooks accounting software அனுபவமுள்ள உதவிக் கணக்காளர்கள் தேவை

உங்கள் சுயவிவர கோவையை (CV) பின்வரும் தொலை பேசி இலக்கத்துக்கு வாட்ஸாப் (whatsapp) மூலம் அனுப்பவும்.

**077 876 7397**

**வேலையாட்கள் தேவை**

யாழ் மாவட்டத்தில் புங்குடுதீவில் அமைந்திருக்கும் எமது இந்து ஆலயத்தில் அண்ணளவாக 15 மாடுகளுள்ள மாட்டுத் தொழுவத்தினை பராமரிப்பதற்கு தொழிலாளிகள் தேவை கவர்ச்சிகரமான சம்பளம்,தங்குமிடம் மற்றும் மதிய உணவு வழங்கப்படும்.

**0777174279**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 8 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 15 லட்சம்

பார்வையிடும் நேரம்

காலை 6.00 - மாலை 6.00 வரை

(CS/1911B) J-1

**077 468 3354, 077 288 0152**

**காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணம் கைதடியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகப் பிரிக்கப் பட்ட நிலையில்.
- பார்வையிடும் நேரம் - காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 23 லட்சம் ரூபா

(cs.1911 A) (N-1

**076 755 8606, 070 168 3354, 070 668 3354**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகரில்

## வெள்ள இடரினால் போக்குவரத்து பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.24

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆலடிச் சந்தி நோக்கிச் செல்லுகின்ற சக்கலாவோடை பகுதி வீதியில் அண்மையில் பெய்த மழையால் வெள்ளம் சூழ்ந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி ஏற்கனவே சேதமடைந்து காணப்பட்ட நிலையில் அருகில் வடிகால்கள் இன்மையால் தற்போது வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந்த வீதியால் பயணிப்போர் குண்டு குழிகளில் விழுந்து எழும்பியே பயணிக்க நேரிடுவதுடன் உயிராபத்தும் ஏற்படுகிறது. இந்த வீதியை பாடசாலை மாணவர்கள், மருத்துவமனை செல்லும் நோயாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பயன்படுத்தி வருகின்றனர். எனவே இந்தச் சிரமத்தைத் தவிர்ப்ப தற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ச-125)


### காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.)
(CS/56729) J-1
தொடர்புக்கு: 077 614 6434

### அறை வாடகைக்குத் தேவை

சுன்னாகம், மருதனார்மடம், கந்தரோடை, மல்லாகம் பகுதிகளில் ஒருவர் தங்குவதற்கு அறை வாடகைக்குத் தேவை.
(CS/56736) J-1
074 099 7517, 074 018 1972

### காணி விற்பனைக்கு

- சுன்னாகம் பவர் ஸ்டேஷனிற்கு (Power Station) பின்னால் பயிர்ச்செய்கை செய்வதற்கு உகந்த காணி விற்பனைக்கு
- நில அளவு - 13 பரப்பும் 7.92 குழியும்
- விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

Contact Number
Pirakanth Pavananthan
+94 77 221 5649

### அலுவலக பணியாளர் தேவை

வெளிநாட்டிற்கு கல்வி கற்க மாணவர்களை அனுப்பி வைக்கும், யாழ் நகரில் இயங்கி வரும் நிறுவனத்திற்கு முன் அனுபவமுள்ள பெண் பணியாளர் தேவை.
077 755 6666

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 50 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: ஜெயம்
077 814 7389
077 986 5457
(cs.1905) (N-1)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சறோஜா (ராணி) சற்குணசிங்கம்

தோற்றம்
14.09.1951

மறைவு
06.12.2023

கோவிலில் நாங்கள்
தெய்வத்தைக்கண்டோம்.
குடும்பத்தில் நாங்கள்
உங்களைக்கண்டோம்.
ஆசையுடன் எங்களை
ஈன்றெடுத்து,
அன்புடன் எங்களை
வளர்த்தெடுத்து,
அப்பாவுக்கு மந்திரியாகி எமக்கு
நல்ஆசானாகி,
இறைவனடி சேர்ந்த எங்கள் அம்மா,
எந்நாளும் உங்களை வாழ்த்தி வணங்கி வாழ்ந்திருப்போம்.

பிரிவால் துயருறுகிறோம்
குடும்பத்தினர்
077 715 0356

46, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கீரிமலை வீதி (மாவிட்டபுரம்)
(CS/56730) J-1

# மரண அறிவித்தல்

## செல்லையா பாலசுப்பிரமணியம்

(SBS Lucky Trade Centre (grand Bazar Jaffna), Bala Fancy House (Kayts),

பாலினி ஸ்ரோர்ஸ் ( காரைநகர்) - உரிமையாளர்



வேலணை பள்ளம்புலத்தை பிறப்பிடமாகவும் காரைநகர் மாப்பாணவூரி, கனடா ரொரன்டோ ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (18.11.2024) திங்கட்கிழமை காரைநகரில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயமணியின் ஆருயிர் கணவரும், அமரர் மகேஸ்வரி, சோமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் வைரவநாதன், செந்தில்நாதன், தனலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சிவலோகநாதன், மகாதேவன், மகேஸ்வரன், ஜெயராணி, ஜெயபாலன், ஜெயவதனி, ஜெயரமேஸ், பாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தி, பவானி, மோகனா, பேரின்பராசா, சுபாங்கனி, மனோரஞ்சன், சாயினி, பிரசாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரணவன், பிரவீனா & கிருஷான், சரண்யன், அபிலாஸ், மயூரன், சாய் ஸ்ரேயா,சாய் நேத்திரா, மேதா, சாய் விசால், மதுரா, மாயோன், கவின், நேயா, ஆரா, அத்தினா, சித்தாரா, காயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை மாப்பாணவூரியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (24.11.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்று காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தொடர்புகளுக்கு:

ஜெயமணி - காரைநகர் - 0 2225 2269,
மகாதேவன் - கனடா - 1 416 716 7052,
மகேஸ்வரன் -ஐக்கிய அமெரிக்கா - 1-626-353-9745,
ஜெயரமேஸ் - ஐக்கிய அமெரிக்கா - 1-929-245-4047,
பாலினி - கனடா - 1 289-242-4620
சிவலோகநாதன் - கனடா - 1 289-830-8494
ஜெயராணி - கனடா - 1 416-704-5199
ஜெயபாலன் - கனடா - 1416-451-0260
ஜெயவதனி - கனடா - 1 416-670-4676

பிறப்பு
15.11.1939

இறப்பு
18.11.2024

(CS/56734) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 | டு : 2055 | கார்த்திகை 09 | ஞாயிற்றுக்கிழமை (24.11.2024) | சிகரம் :229

நெருப்பாகி நெருப்பாகி நெருப்பாகி நிமிர்வோம்
உயிர்ப்போடு பொறுப்போடு விருப்போடு நிமிர்வோம்
நெஞ்சினில் எரியும் தீயே வீரம் தருவதும் நீயே
கண்ணீர் மழையைத்தடுப்போம் கல்லறை வேதம் படிப்போம்

–புதுவை

# கண்ணீரால் காத்தோம் கருக திருவுளமோ?

தயாளன்



தமிழ் மக்கள் நன்றாக வல்லாரை சாப்பிட வேண்டும். இப்படிச் சொல்வதற்கான தேவையை அண்மைய நாள்களில் வெளி வரும் செய்திகள் உணர்த்துகின்றன. எவ்வளவு எளிதில் எல்லாவற்றையும் மறந்தோம்? ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் நாடளாவிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற விசுவமடு மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவனின் மனதில் பதிந்த விடயங்கள் ஏன் பெரியவர்களின் மனதில் நிலைக்கவில்லை? மாற்றம் ஒன்றே மாறாதது என்ற வசனத்தை இலகுவாகச் சுட்டிக்காட்டி விட்டுப் போகலாம். ஆனால் நாம் அப்படி இல்லை என்று நிமிர்ந்து நின்று உணர்த்தும் காலமாக இந்த ஆண்டின் மாவீரர் நாளை நினைவு கூருவோமா?

தமிழ்த்தேசியம் என்பது வெறுமனே மேடையில் உச்சரித்துவிட்டுப் போகும் விடயமல்ல. இதன் உருவாக்கம் உயிரையும் உதிரத்தையும் கொடுத்து கட்டியெழுப்பப்பட்டது என்பதற்கு சில உதாரணங்களை மீள நினைவுபடுத்துகிறோம். வடக்கு - கிழக்கு இணைந்த செயற்பாடு என்று அரசியல்வாதிகள் சொல்லி வந்தாலும் சிந்தனையில் அது இல்லை. ஆனால் தமிழீழத்தேசியத் தலைவரின் சிந்தனை- செயற்பாடு அவரது தனித்துவத்தைக் காட்டும். கிழக்கில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக அனுப்பப்பட்ட ஒரு போராளியிடம் சொல்லப்பட்ட விடயம் இது

"நீங்கள் அங்கே ஓரிரு தாக்குதல்களைச் செய்தபின் தாக்குதல் பிரிவுக்குப் பொறுப்பாக பரமதேவாவை (ராஜா) நியமியுங்கள். அவர் பொறுப்பேற்றதும் நீங்கள் திரும்பி விடுங்கள். பரமதேவா தனி ஒரு இயக்கம் தொடங்கவும் அனுமதியுண்டு. கிழக்குக்கான தலைமை அங்கேயே உருவாகவேண்டும் என்பதை உணர்ந்து செயற்படுங்கள்- பரமதேவாவுக்கு என்னென்ன தேவைப்படுகிறதோ அவற்றையெல்லாம் நாம் கொடுக்க வேண்டும்".

பயணத்தின்போது ஒருநாள் தமக்கான அறிவுறுத்தல் பற்றி பரமதேவாவிடம் கேட்டார் அந்தப் போராளி. ஏனெனில் இயக்கத்தில் இணைபவர்கள் அதிலிருந்து விலக நேர்ந்தால் தனியாக ஒரு இயக்கத்தைக் கட்டியெழுப்ப முயலக்கூடாது என்றொரு இறுக்கமான விதியிருந்தது. இது ஒரு தலைமறைவான இயக்கம். விலகிச் செல்பவர்கள் தனி இயக்கம் ஆரம்பித்துப் பிடிபட நேர்ந்தால் எல்லா மறைவிடங்களையும் காட்டிக்கொடுக்க வேண்டியேற்படும். அந்தளவுக்குச் சித்திரவதை நடக்கும். அப்படியிருக்கையில் பரமதேவாவுக்காக ஒரு விதிமீறலை தலைவர் மேற்கொண்டார் என்றால் அவர் மீது தலைவர் வைத்திருந்த நம்பிக்கை, கிழக்கிலிருந்து தோன்ற வேண்டிய தலைமைப் பண்புக்கான அடையாளம் போன்ற எல்லாக் காரணங்களாலும் தான் இம்முடிவை எடுத்தார். எனினும் பரமதேவாவிடம் இது பற்றி விசாரித்தார் அந்தப் போராளி. இதற்குப் பரமதேவா "தம்பி (தலைவர்) என்னட்டை இது பற்றிச் சொன்னவர் தான். ஆனால் அதுக்கு நான் எனக்கும் உங்களுக்கும் உள்ள புரிந்துணர்வு என்னோட சேர்ந்து கொள்ளவரும் எல்லாருக்கும் இருக்கும் எண்டு சொல்லமுடியாது. அதால எதிர்காலத்தில ரத்தக்களரி உண்டாகலாம். ஆனபடியால் இதுபற்றி யோசிக்கத் தேவையில்லை. எனக்கு நீங்கள்தான் இயக்கத்துக்கும் இனத்துக்குமான சரியான தலைவராகத் தெரியுறீங்கள். ஆனபடியால் நான் உங்கட பிரதிநிதியாக நின்று உங்கட கட்டளையை நிறைவேற்றவேணும் எண்டு நினைக்கிறன் எண்டு சொன்னனான்" எனப் பதிலளித்தார்.

பயிற்சியெடுத்த போராளிகளை வீட்டுக்கு ஒருமுறை அனுப்பி வைக்கும் நடைமுறை இருந்தது. பரமதேவாவின் தாயார் வசித்ததோ மட்டக்களப்பின் பிரதான இராணுவமுகாம் இருந்த கல்லடிப் பகுதியில் உள்ள வீட்டில். எனவே நிலைமையை விளக்கிய பின் வேறொரு இடத்தில் இந்தச் சந்திப்பினை மேற்கொள்ளலாமே என அவரிடம் கேட்கப் பட்டது. அதற்கு அவர் அளித்த பதில் எவ

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருமே எதிர்பார்க்காதது. "நாள் ஆயுதப் போராட்ட வழிமுறையைத் தேர்ந்தெடுத்தபின் எனது அம்மா என்னை ஒரு கைதியாகவே பார்த்துள்ளார். வீரனாகப் பார்க்கவில்லை. எனவே நான் ஒரு வெற்றிகரமான தாக்குதலில் பங்குபற்றி அதில் கைப்பற்றப்பட்ட ஆயுதத்துடனேயே ஒரு வீரனாக அம்மாவைச் சந்திக்க விரும்புகிறேன்" பரமதேவாவின் பதில் அந்தப் போராளிகளைப் புல்லரிக்க வைத்தது. ஆனால் காலம் வரலாற்றை தனது போக்கில போக வைத்தது. 22 செப்ரெம்பர் 1984 அன்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தின்மீது நடைபெற்ற தாக்குதலின் ஆரம்பத்திலேயே அவர் நெஞ்சில் காயமுற்றார். இத்தாக்குதலில் ரவி (தம்பையா வாமதேவன்- மகிழடித்தீவு) என்ற போராளியும் காயமுற்று வலியால் துடித்துக்கொண்டிருந்தார், பொலிஸ் நிலைய எல்லைக்குள் ஏனையவர்கள் புகுந்தனர். அப்போது பரமதேவா ரவியிடம் சொன்னார் "கொஞ்சம் பொறுத்திரு; உள்ளுக்குள் போனவர்கள் வந்ததும் எங்களைக் காப்பாற்றிக் கொண்டு செல்வார்கள்".


பரமதேவாவை (ராஜா)

ஆனால் சண்டையின் போக்கு போராளிகளுக்குச் சாதகமாக அமையவில்லை. 303 ரக துப்பாக்கி மட்டும் பின்னர் கிடைத்தது. திரும்பி வரும்போது பரமதேவாவையும் ரவியையும் தூக்கிக்கொண்டு போக முயன்றனர். அப்போது பரமதேவா சொன்னார் "எங்களைத் தூக்க வேண்டாம். அதோட நான் பாரமானவன். நானும் ரவியும் குப்பி (சைனற்) கடிச்சிட்டம். நீங்கள் எல்லாருமே தப்பிப் போங்கோ. எனக்காக ஒண்டு செய்யுங்கோ; அம்மாட்ட போய்ச் சொல்லுங்கோ உங்கட மகன் சண்டையில தான் செத்தான் எண்டு. ஏனெண்டால் அண்ணர் புளொட்டில இருக்கிறதால வேற மாதிரி கதைகள் வரலாம்." மரணத்தைத் தொட்டுக்கொண்டு இருக்கும் தறுவாயிலும் இயக்கத்தின் மீது பழி வந்து விடக்கூடாது என்பதில் எவ்வளவு உறுதியாக இருந்திருக்கிறார். தான் ஒரு வீரனாகத்தான் மண்ணில் சாய்ந்தேன் என்று தாய்க்கு தெரிவிக்க முயன்றபோது சமரில் கைப்பற்றப்பட்ட ஆயுதத்தோடு தாயைச் சந்திக்கவேண்டும் என்ற தவிப்பும் சாத்தியம் இல்லாமல் போனமை குறித்த வேதனையையும் உணரமுடிந்தது. பரமதேவா தொடர்பான நிலைப்பாட்டை வேறு எவர் தொடர்பாகவும் தலைவர் வைத்திருக்கவில்லை என்பதைக் காலம் நிரூபித்தது. கருணாவை தனது தளபதிகளில் ஒருவராகத்தான் அனுப்பி வைத்தாரேயொழிய பரமதேவாவின் நிலையில் வைத்துப் பார்க்கவில்லை. அத்தோடு கிழக்கில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த முன்னோடிகளில் ஒருவராக பரமதேவா இருந்தமையும் காரணம்.

★ ★ ★ ★ ★ ★

போராளிகளின் பங்களிப்புக்கு நிகராக எமது மக்களின் பங்களிப்பும் இருந்திருக்கின்றது. இதற்கு ஆரையம்பதியைச் சேர்ந்த 'அன்ரி' எனப்படும் பூரணலட்சுமி சின்னத்துரையின் பங்களிப்பைச் சுட்டிக்காட்டலாம். இவருக்கு ஒரேயொரு ஆண்பிள்ளையுடன் இரு பெண் பிள்ளைகளும் இருந்தனர். போராளிகளுக்கு உணவு வழங்குவது உட்படப் பல்வேறு வழிகளில் அவர் உதவி வந்தார். ஒரு நாள் சற்றும் எதிர்பாராத சம்பவம் நடந்தது. "இந்தாங்க இவன் ரகுவை இயக்கத்துக்கு கூட்டிட்டுப் போங்க" என்று சொல்லி ஒரு போராளியின் கையில் தனது ஒரேயொரு மகனை ஒப்படைத்தார். பயிற்சி முகாமிற்கு அனுப்பப்பட்ட அவனும் இதே ஊரைச் சேர்ந்த இன்னுமொரு போராளியும் மருத்துவத் தேவைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்குச செல்வதற்காக அனுப்பப்பட்டனர். மருத்துவப் பிரிவு ஆரம்பிக்கப்படாத காலமாக அது இருந்ததால் அரச மருத்துவமனைகளையே முற்றாக நம்பி இருக்கவேண்டி இருந்தது. ஒத்த வயதுடைய இரு இளைஞர்கள் நிற்பதைக் கண்ட படையினர் அவர்களைக் கைதுசெய்ய முயன்றனர். எனவே இருவரும் தப்ப வழி இல்லாத நிலையில் சயனைட் அருந்தி உயிரை மாய்த்தனர். மட்டக்களப்பு நகருக்கு சென்ற அன்ரி, படையினரின் வாகனத்தில் குப்புறப்படுத்தி வைத்திருந்த இவர்களின் உடல்களைக் கண்டார். ஆனால் அவர்கள் யார் என அடையாளம் காணமுடியவில்லை. "ரெண்டு புள்ளகள கொண்டு போறானுகள். அதில ஒண்டு பச்சைச் சாறன் உடுத்தி இருந்தது" என்று சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருந்தார். அவருக்குத் தெரியவில்லை பச்சைச் சாறன் உடுத்திருந்தது தனது மகன் தான் என்று.

அப்போதைய மட்டக்களப்புப் பொறுப்பாளர் அருணா வைத்தியத்துக்காக அனுப்பியவர்கள் வந்து சேர்ந்தார்களா என்று கேட்ட பின்னரே உயிரிழந்தவர்கள் யார் என்ற விடயம் தெரிய வந்தது. அன்ரிக்கும் தகவல் தெரிவித்தாயிற்று. இனி எப்படி அவரின் முகத்தில் விழிப்பது? மாலை நேரம் அவரின் வீட்டுக்குப் போவோமென்று தயங்கித் தயங்கி அங்கு சென்றார் அந்தப் போராளி. உங்களுடைய கையில் தானே ரகுவைக் கையளித்தேன் என்று கேட்பாரே என்று நினைத்தவாறு சென்றார். அவரைக் கண்டதும் "ரகு இல்லை என்பதற்காக வீட்டை வராமல் நிண்டிடாதையுங்கோ. நீங்கள் என்னைத் தான் முதலில் கண்டனிங்கள்". என்று அழுகையினோடே சொன்னார் அன்ரி. அதிர்ந்து போய் நின்றார் அப்போராளி.

இலட்சியத்தால் ஏற்பட்ட உணர்வுகள் - உறவுகளின் கனதியை உணர்ந்தார். இந்திய இராணுவ காலத்தில் கம்பியை பழுக்கக் காய்ச்சி இவரது கையில் சுட்டது ஒரு ஆயுதக்குழு. இரண்டாம் கட்ட ஆயுதப் போர் தொடங்கியபின் இன்னொரு ஆயுதக்குழு போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள படுவான்கரைக்கு யாரும் தோணியில் செல்லக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தது. முன்னர் ரகுவைப் பொறுப்பேற்ற போராளி வடக்கிலிருந்து நடந்தே வந்துள்ளார் என கேள்வியுற்ற அன்ரி பலகாரங்கள் சுட்டுக்கொண்டு, தோணிக்காரர் ஒருவரின் துணையுடன் படுவான்கரைக்குச் சென்றார். அங்கு சென்ற பின்னர்தான் அந்தப்போராளி அங்கிருந்து சென்று விட்டார் என்பதை அறிந்தார் அன்ரி. பலகாரங்களை அங்கிருந்த போராளிகளைச் சாப்பிடும்படி கையளித்து விட்டு திரும்பி ஆரையம்பதிக்கே வந்தார். இந்த விடயத்தை அந்த ஆயுதக் குழுவினர் அறிந்தனர். தமது உத்தரவை மீறும் துணிச்சல் யாருக்கும் வரக்கூடாது என எண்ணினார். முடிவு அந்த ஆயுதக் குழுவின் பொறுப்பாளர் அன்ரிக்கு மரண தண்டனை விதித்தார். அவரது ஆணையை நிறைவேற்ற அன்ரியை இழுத்துச் சென்றனர் அந்தக் குழு உறுப்பினர்கள். மரணம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்த அன்ரி எவரையும் கெஞ்ச முயலவில்லை. முடிந்தவரை கையாலேயே அவர்களைத் தாக்கினார். எனினும் அவரது உயிரைப் பறித்தனர் அந்தக் குழுவினர். இப்படியான உணர்வுள்ள மக்களும் அவர்களின் சந்ததியினரும் இருப்பதால்தான் தமிழ்த்தேசியம் இன்னமும் கிழக்கில் உயிரோடிருக்கிறது. அந்தச் செய்கையை கடந்த 14ஆம் திகதியன்று உரத்துச் சொன்னார்கள் கிழக்கு மக்கள். ஆம் அங்கு உணர்வும் உதிரமும் என்றும் தமிழ்த் தேசியத்தை உரத்துச் சொல்கின்றன. அங்கு வல்லாரையின் தேவை பெரிதாகத் தேவையில்லை.

★ ★ ★ ★ ★ ★


'அன்ரி' எனப்படும்
சின்னத்துரை பூரணலட்சுமி

வடக்கில் சிறப்புத் தளபதியாக மகன் நின்று முதன்மைச் சுடரேற்றிய மாவீரர் துயிலுமில்லத்தில் இரு மாவீரர்களின் தந்தையாக (பிரிகேடியர் தீபன், லெப்.கேணல் கில்மன் ஆகியோரின் தந்தை) நின்று முதன்மைச் சுடரேற்றிய வரலாறு கந்தையா வேலாயுதபிள்ளை என்பவருக்கு உண்டு. கிளிநொச்சியில் இஸ்லாமிய மாவீரர்களின் வரலாறும் பதியப்பட்டுள்ளது. அங்கு சிங்கள அன்னையொருவரும் மூன்று மாவீரர்களின் தாயாராக இன்றும் வாழ்ந்து வருகிறார். பிரதான வாய்க்காலால் வெள்ளம் வரும்போது வேகமாக வரும். துணை வாய்க்கால்களில் திருப்பி விடப்படும்போது அதன் வேகம் குறையும். சிறிது நீர்விரயம் ஏற்படும்தான். அதற்காக நிலம் பாலைவனமாக மாறிவிட்டதாக விளக்கம் கொடுக்கக்கூடாது. அதுபோலவே தான் தமிழ்த்தேசியமும்.

## முகம்தனைக் காட்டுவீரோ?



கார்த்திகை மலர்கள்
கனதியாய் மலர்ந்துள்ளன
கார்த்திகை மைந்தர்களாய்.

புன்னகைக்கும் பூக்களில்
பிள்ளைகள் முகம்தனை
ஒவ்வொன்றாய் தேடுகின்றோம்.

வீரத்தின் விளைநிலங்கள்
வீறுகொண்டெழுந்தீர்கள்
நேரம் இதுவென்று
நேரிடையாய்ச் சென்றீர்கள்.

செங்குருதி மழையிலே
உம்குருதி சிந்தினீர்கள்
தேசத்தின் விடியலுக்காய்
பாசத்தை மறந்தீர்கள்.
வெஞ்சினம்தனைக் கொண்டு
செஞ்சூரியனாய் எழுந்தீர்கள்.

களமாடி நின்றீர்கள்
காலத்தை வென்றீர்கள்
தளராத உறுதியோடு
தரணியிலே நிலைத்தீர்கள்
சரித்திரம் படைத்துமே
சாவினை வென்றீர்கள்.

மனங்களை வென்றிட்ட
மகத்துவம் பெற்றவர்களே
காரத்திகையின் தீபமான
காவிய நாயகர்களே
முகம்தனைக் காட்டுவீரோ
அகமது நிறைந்திட...


கிருஷ்ணவேணி சிங்கராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்குப் பிள்ளையைத் தந்த வானம்







ஜெரா

இது மாவீரர் மாதம். தாயகத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்திருப்பின் இந்நாட்களுக்கு உணர்வுபூர்வமான அர்த்தம் கிடைத்திருக்கும். தம் பிள்ளைகளை நில மீட்புக்காக உவந்தளித்தவர்களின் பெற்றோர் உன்னதமிக்கவர்களாக மதிப்பளிக்கப்பட்டிருப்பர். தம் பிள்ளைகளைப் போருக்குக் கொடுத்தவர்களின் பெற்றோர், தனித்து விடப்படாதிருப்பர். அவர்களை வறுமைக்குள் வாடவிடாது, பிரகாசம்மிக்க வாழ்க்கையொன்றினைப் புலிகள் உருவாக்கிக்கொடுத்திருப்பர். ஆனால் புலிகளின் மௌனிப்புக்குப் பின்னர், தம் பிள்ளைகளைப் போருக்குக் கொடுத்த பெற்றோரின் வாழ்க்கையும் அனேகமாக மௌனித்துவிட்டது. இருள் கவிழ்ந்துவிட்டது.

அப்படியாக இருளில் சிக்கிக்கொண்ட ஒரு தாயின் மெய்க்கதைதான் இது.

வயது 79ஐ நெருங்கிக்கொண்டிருக்கும் முத்தையா முனியம்மா வவுனியா வடக்கின் எல்லைக் கிராமமான முதுரம்பிட்டியில் வசிக்கிறார். அந்தக் கிராமத்தில் நேற்றுப் பிறந்த குழந்தைக்கும் முனியம்மாவைத் தெரிந்திருக்கும் அளவிற்குப் பிரபலமானவர். அன்பாகப் பேசுவதிலும், காயோ, பழமோ தன்னிடமிருக்கும் எந்த உணவையும் பகிர்ந்துகொடுப்பதிலும்தான் அவர் இத்தகைய பிரபலத்தைப் பெற்றார். இப்போது படத்திலிருக்கும் குடிசையில் தனித்து விடப்பட்டிருக்கும் இவரின் பிள்ளைகள், கணவன் என குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் சுவரில் நினைவுப்படங்களாக மாட்டிவைக்கப்பட்டுள்ளனர். அயலிலிருக்கும் தோட்டங்களுக்கு நாளாந்தக் கூலி வேலைக்குச் செல்லும் முனியம்மா, கூலிப்பணத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்துகிறார். அரசு கொடுக்கும் வீட்டுத்திட்டமோ, ஏனைய நிவாரண உதவிகளோ இவரை நாடிவருவதில்லை. புள்ளியிடல் அடிப்படையில் மூன்றுக்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்டவர்களுக்கே அரச நிவாரணங்களின் முன்னுரிமை என்கிற இலங்கையில் எழுதப்படாத சட்டத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டவர் முனியம்மா தான். எவ்வழியில் பார்த்தாலும் தனியே வாழும் ஒருவர் இந்தப் புள்ளியிடலை நெருங்கமுடியாது. இந்தப் புள்ளியிடல் சூட்சுமத்தை விளங்கிக்கொள்ளாத முனியம்மா, சில பல முயற்சி தோல்விகளுக்குப் பின்னர், அரச உதவித் திட்டங்களுக்கு அலைவதை நிறுத்திக்கொண்டார். தனது பிள்ளைகள் தன்னோடு இருந்தால், இப்படி அலையவேண்டியிருக்காது. அதேவேளை இது போன்ற புள்ளியிடல்களில் முதன்மைநிலைகளையும் பெற்றிருக்கலாம் என்ற முடிவோடு, கூலி வேலைக்கே திரும்பி விட்டார். இப்போதைக்கு உடலில் இயலுமை இருக்கும் வரைக்கும் இந்த வேலைகளில் கிடைப்பதை கொண்டு வாழ்ந்துவிடவேண்டும். இயலுமை உள்ளநேரமே இறந்துவிடவேண்டும் என்பது அவரின் மிச்ச வாழ்வினது இலட்சியமாக இருக்கிறது.

1995ஆம் ஆண்டுக்கு முன்னரான முனியம்மாவின் குடும்பம் பற்றி அவர் நினைவுமீட்கத் தொடங்கும்போது, முகமெல்லாம் ஆயிரம் நட்சத்திரங்கள் பிரகாசிக்கத் தொடங்குகின்றன. மிகுதியான சந்தோசம் அவரை ஆட்கொள்ளத் தன் கதையைச் சொல்லத் தொடங்குகிறார்.

முனியம்மாவின் கணவர் கடுமையான உழைப்பாளி. அவரின் கடின உழைப்பினால், தன் ஒரே மகள் விஜயகுமாரியையும், ஒரே மகனான விஜயகுமாரையும், மனைவி முனியம்மாவையும் எவ்விதக் குறைகளுமின்றி கவனித்து வந்தார். அந்தக் கிராமத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடும், அன்போடும் வாழ்ந்த குடும்பங்களில் முதன்மையானது முனியம்மாவின் குடும்பம். முத்தையா - முனியம்மா இருவருமே அதிகம் படிக்காதவர்கள் என்றபோதிலும், தம் இரு பிள்ளைகளையும் நன்றாகக் கல்வி கற்கச் செய்துவிடவேண்டும் என்பதில் உறுதியாய் இருந்தனர். பெற்றாரின் எண்ணத்தைப்போலவே பிள்ளைகளும் நன்றாகப் படித்தனர். கிராமப்புறப் பாடசாலையாக இருந்தபோதிலும், கல்விக்குக் குறைவிருக்கவில்லை.

**1995ஆம் ஆண்டுகளுக்கு முன்பான வவுனியா வடக்கு எல்லைக்கிராமங்களின் வாழ்க்கை என்பது மிகுந்த அச்சுறுத்தலானது.** வயல்களுக்குச் செல்லும் ஆண்கள் வீடு திரும்பமாட்டார்கள். மாடு சாய்க்கச் சென்ற இளையவர்கள் வீடு திரும்பமாட்டார்கள். ஒரு கிராமத்திலிருந்து மற்றைய கிராமங்களுக்கு வேலைக்காக செல்பவர்கள் கூட வீடு திரும்புவது என்பது பலத்த சந்தேகம்தான். எல்லைக் கிராமங்களில் குடியேற்றம் செய்யப்பட்டிருந்த சிங்கள காடையர்களும், அவர்களோடு இணைந்த இராணுவத்தினரும், காடுகளுக்குள் வந்து பதுங்கியிருந்து கொண்டு, வேலைக்குச் செல்லும் தமிழர்களை பிடித்துச் செல்வது, சுட்டுக்கொல்வது, மாடுசாய்க்கச் சென்றவர்களை மாடுகளோடு சாய்த்துச்சென்று, காட்டுக்குள் வைத்து, அவர்களின் கழுத்தை அறுத்து மரங்களில் கொழுவிவிட்டுச் செல்வது, கைதுசெய்யும் ஆண்களை மரங்களில் கட்டிவைத்துவிட்டுச் செல்வது, ரயர்களை எரியூட்டி அதற்குள் தூக்கிப்போட்டு எரித்துவிட்டுப் போவது என பல்வேறு நாசகார வேலைகளை அரங்கேற்றினர். இந்த வகையில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் எந்தப் பதிவுமில்லை. செய்தியுமில்லை. இவ்வளவு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டுதான் அங்கே தமிழர்கள் வாழ்ந்தனர். இந்த அநியாயங்களைப் பார்த்து இளைஞர், யுவதிகள் கொதித்துப் போயிருந்தனர். எந்த வழியிலாவது போராடுவதற்கு அவர்கள் தயாராயிருந்தனர்.

இப்படியாக மக்களை போராடத் தூண்டிய காலப்பகுதியில் தான் விடுதலைப் புலிகள் முதிரம்பிட்டி கிராமத்தைக் கடந்து சென்று, பட்டிக்குடியிருப்பு என்கிற இடத்தில் முதல் முகாமை அமைத்தார்கள். அந்த முகாம் வரவிற்குப் பிறகு, காட்டுமிராண்டிகளின் அச்சுறுத்தல் சற்றுக் குறைந்தது. இதனால் ஆயுதங்களோடு வலம்வந்த புலிகள், மக்களுக்குப் மிகப் பிடித்தவர்களானார்கள். தங்களைப் பாதுகாக்க வந்த புனிதர்களாக மக்கள் அவர்களைப் பாதுகாக்கத் தொடங்கினர். அவர்களோடு இணைந்து பணியாற்றத் தொடங்கினர். இளைஞர்கள், யுவதிகள் புதிய போராளிகளாக மாறுவதில் அவ்வளவு ஆர்வம் காட்டினர். அந்தவகையில் முனியம்மாவின் மகளும் விரைவாகவே இணைந்துகொண்டார். ஆரம்பத்தில் தங்கள் ஒரே மகள், விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதில் விருப்பமில்லாதவர்களாக இருந்த போதிலும், சிறிது காலத்தில், புலிகள் அமைப்பில் அனைவரும் இணையவேண்டிய தேவையை அந்தக் குடும்பம் விளங்கிக்கொண்டது. மாதந்தோறும், தம் மகள் இருக்கும் முகாமைத் தேடிப்பிடித்து, உலருணவுப் பொருட்களை வழங்கிவிட்டு வருவதை முனியம்மாவின் குடும்பம் ஒரு வழக்கமான செயற்பாடாக மாற்றியிருந்தது.

இப்படியான காலப்பகுதியில்தான் ஜெயசிக்குறு படை நடவடிக்கையை சந்திரிகா அம்மையார் தொடங்கினார். அந்த நடவடிக்கையின் முதல் இலக்காக இருந்ததே முனியம்மா வசித்த எல்லைக்கிராமம் தான். எனவே அந்த எல்லைக்கிராமங்களிலிருந்த அனைத்து மக்களும் ஒரு சில மணிநேரங்களில் தம் அனைத்து உடைமைகளையும் விட்டு வன்னியின் பல்வேறு பாகங்களுக்கும் இடம்பெயரலாயினர். மடு, நட்டாங்கண்டல், ஒட்டுசுட்டான், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம், அக்கராயன் எனப் பல கிராமங்களுக்கும் இடம்பெயர்ந்தனர். முனியம்மாவின் குடும்பம் வள்ளிபுனத்திற்கு இடம்பெயர்ந்தது. வள்ளிபுனம் பாடசாலையில் முனியம்மாவின் குடும்பம் தங்கியிருந்தபோதுதான், சில பெண் போராளிகள் அவரைத் தேடி வந்தனர். நோய்வாய்ப்பட்டு படுக்கையிலிருந்து முத்தையாவைப் பார்த்ததும் அவர்களால் அந்தச் செய்தியைச் சொல்லமுடியவில்லை. நலம் விசாரித்ததோடு திரும்பிச் சென்றுவிட்டனர். பின்னர் முகாம் தலைவரோடு உரையாடி, பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளரையும் அழைத்து வந்து, "அம்மா உங்கட மகள் மாவீரர் ஆகீற்றா" என்கிற செய்தியை தயங்கித் தயங்கிச் சொல்லிவிட்டனர். அந்த செய்தியைக் கடந்து சில நாட்களிலேயே முத்தையாவும் இறந்துபோனார். அதற்குப் பிறகு தன் மகனோடு உடைந்துபோனதொரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார் முனியம்மா.

2001ஆம் ஆண்டு ஓயாத அலைகள் படை நடவடிக்கையைப் புலிகள் நடத்தினர். ஒரே இரவில் முனியம்மாவின் கிராமமும் புலிகளிடம் விழுந்தது. இடப்பெயர்வுக்குள்ளேயே இளைஞனாக வளர்ந்து விட்ட முனியம்மாவின் மகனோடு 2002ஆம் ஆண்டில் மீளவும் ஊர்திரும்பினார். ஊர் திரும்பியதும், மகன் தாயைப் பார்த்துக்கொண்டார். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் எல்லை காக்கும் போராளிகளுக்கு உதவியாக செல்லும் பணி அப்போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு பணியிலீடுபடுபவர்களை எல்லைப் படை வீரர்கள் என்று அழைத்தனர். 2005 ஆம் ஆண்டு முனியம்மாவின் மகன் உழவு இயந்திரமொன்றில் பண்ணை வேலைக்காக எரு ஏற்றிக்கொண்டு சென்றார். அவருடன்சேர்ந்து மரியான், சுரேஸ் ஆகியோரும் சென்றனர். அவர்களிடம் எரு அள்ளப் பயன்படும் மண்வெட்டியும், எரு அள்ளிக்கொட்டும் கூடையும், ஒரு உமல் பையும், அதற்குள் தேநீர் போத்தல் மாத்திரமே இருந்தது. இந்த உழவு இயந்திரத்தை இலக்குவைத்து இலங்கை அரச படைகளின் ஆழ ஊடுருவும் படையணியினர் நடத்திய கிளைமோர் தாக்குதலில் முனியம்மாவின் ஒரே நம்பிக்கையாக இருந்த ஒரே மகனும் உடல் சிதறி இறந்துபோனார்.

அதற்குப் பிறகு நடந்தவற்றை முனியம்மாவால் சொல்லவும் முடியவில்லை. கட்டுரையாளரால் கேட்கவும் முடியவில்லை. 2009 இடப்பெயர்வு, 2011 மீள்குடியேற்றம், அதற்குப் பின்னரான அவரைத் தொடரும் வறுமையும் தனிமையும், அவரின் 79 வருட வாழ்வை நிலைகுலையச் செய்திருக்கிறது. வாழ்வின் மீதான எந்தப் பிடிமானமும் இல்லாது கைவிடப்பட்டிருக்கும் பல்லாயிரம் மாவீரர்களின் பெற்றோரின் மொத்தச் சாட்சியமாக இருக்கிறார் முனியம்மா.

'போருக்குப் பிள்ளைகளைக்

கொடுத்த வானம்

**இன்னமும் அழுதுகொண்டிருக்கிறது' - என்கிற விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினியின் இறுதிக் கவிதையின் வாழும் சாட்சியமாகவும் முனியம்மா நம் முன் இருக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களை விடவும் வேறெந்த கடவுளும் இலவே!



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

*என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை*

*முன்நின்று கல்நின்றவர்.*

இந்தத் திருக்குறளின் பொருளாவது 'பகைவர்களே! எங்களது வீரம் மிகுந்த தலைவன் முன்பு எதிர்த்து நிற்க சிறிதும் துணியாதீர்கள். ஏனெனில் அவரை (என் தலைவனை) வீழ்த்துவேன் என்று வெற்றுச் சாகசம் செய்த பகைவர்கள் எல்லோரும் அவரிடம் போரிட்டு வீழ்ந்து நடுகற்களாய் அவரவர் வீட்டில் (நாட்டில்) நிற்கின்றனர்' என்பதாகும். இந்தக் குறளுக்கு எழுத்தாளர் ஜெயமோகன் வேறு ஓர் உரை கூறியதாக நினைவு. இந்தக் திருக்குறளை ஒப்பிட்டு பார்த்தோமானால், தலைவரையும் அவரது வீரர்களையும் நேருக்கு நேர் தைரியமாக போரிட்டதால் நடுகற்களாய் பகைவர்கள் நிற்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. போர்க்களத்தில் சண்டையிட்டு மாண்டு போன வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது நமது பண்டைய தமிழ் மரபு ஆகும். இவ்வாறு நடப்பட்ட கற்களே நடுகற்கள். தமிழகத்தில் சங்க காலம் தொட்டே வீரர்களுக்கு நடுகல் வைக்கும் வழக்கம் இருந்துள்ளது.

2008 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற மாவீரர் நினைவு நாள் விழாவில் வைகோ உரை நாம் எல்லோரும் கேட்டிருப்போம். அது போன்ற உணர்ச்சிமிக்க உரையினை நான் அதற்கு முன்னர் கேட்டதில்லை. அப்படி வீரவசனம் பேசிய அவர் ஒரு தொகுதிக்காக இப்பொழுது கழக வாசலில் தவம் கிடப்பது காலத்தின் சோதனை. இதே வைகோ தான் வாரிசு அரசியலை எதிர்த்து தனிக் கட்சி ஆரம்பித்தார் என்பது தனிக்கதை. நமது மக்களின் தேசிய வியாதியான மறதி என்பது அரசியல்வாதிகளின் வரம் அல்லவா. வைகோவின் தமிழ் உரையினை கேட்பதென்பது ஒரு தனி அனுபவம் தான். அந்த உரையினைக் கேட்டு அப்பொழுது கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உரையில், பண்டைய நாகரிகங்களில் எவ்வாறு மாவீரர்களுக்கு வீரவணக்கம் செய்தனர் என்பதை பற்றி மிக விரிவாக அவர் பேசியிருப்பார். கிரேக்க நாகரிகத்தில் போர்க்களத்தில் உயிரிழந்த வீரர்களின் எலும்புத்துண்டுகளை ஏதென்ஸ் மாநகரத்தில் வரிசையாக அடுக்கிவைத்து வீர வணக்கம் செலுத்துவது வழக்கம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வீரர்களுக்கு நடுகல் எடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது என்பதனை தொல்காப்பிய வரிகளை எடுத்துக்காட்டி வைகோ பேசியிருந்தார்.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு மரபில்
பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர"

அதாவது நடவேண்டிய கல்லை மலையில் கண்டெடுத்தல், தேர்ந்தெடுத்த கல்லைக் கொண்டு வருதல், அந்தக் கல்லில் வீரனின் பெயரையும் சிறப்பையும் பொறித்து நீரில் கழுவுதல், பின்பு அதனை நட வேண்டிய இடத்தில் நட்டு மாலைகளிட்டுச் சிறப்புச் செய்தல், இறுதியாக அவ்வீரனின் புகழையும், பெருமைகளையும் வாழ்த்திப் பாடுதல் என்பதை தொல்காப்பியம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

மாங்குடி கிழார் எழுதிய புறநானூற்று பாடலில் நடுகற்களை பற்றிய பாடல் உள்ளது. இந்தப் பாடல் மாபெரும் போர் முடிந்த பின்பு முல்லை நாட்டின் நிலையினை மிக நுண்ணியமாகவும், எளிதாகவும் எடுத்துச் சொல்லும். போர் முடிந்த பிறகு சிற்றூருக்கு சென்ற புலவர் அங்கு தான் பார்த்த காட்சிகளை எடுத்துச் சொல்கிறார். மாவீரர்களின் நினைவைப் போற்றும் நடுகற்களைப்போல் சிறந்த கடவுள் இல்லை என்று மிகத்தெளிவாக சொல்கிறார் .

*அடலருந் துப்பின் .. .. .. ..*

*குரவே தளவே குருந்தே முல்லையென்று*

*இந்நான் கல்லது பூவும் இல்லை;*

*கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே*

*சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு*

*இந்நான் கல்லது உணாவும் இல்லை;*

*துடியன் பாணன் பறையன் கடம்பனென்று*

*இந்நான் கல்லது குடியும் இல்லை;*

*ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி*

*ஒளிறுஏந்து மருப்பின் களிறுஎறிந்து வீழ்ந்தெனக்*

*கல்லே பரவின் அல்லது*

*நெல்உகுத்துப் பரவும் கடவுளும் இலவே.*

திணை: வாகை. வாகைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரை வென்று ஆரவாரித்தல்.


துறை: மூதின் முல்லை. மறக்குடியில் ஆடவரைப் போலவே மகளிர்க்கும் வீரமுண்டு என்பதைக் காட்டுவதாகும்

அருஞ்சொற்பொருள்: அடல் = அழித்தல்; துப்பு = வலிமை. குரவு = ஒரு வகையான செடி; தளவு = செம்முல்லை; குருந்து = குருக்கத்தி. பொறி = புள்ளி; கிளர்தல் = நிறைதல். துடி = உடுக்கை; குறிஞ்சிப் பறை; ஒன்னாமை = பொருந்தாமை; தெவ்வர் = பகைவர். மருப்பு = யானை தந்தம். பரவுதல் = வழிபடுதல். உகுத்தல் = தூவல்.

விளக்கம் : குரவமலர், தளவுமலர், குருந்த மலர், முல்லைமலர் ஆகிய இந்நான்கு மலர்களைத் தவிர வேறு எந்த மலர்களும் இங்கு இல்லை. கரிய அடிப்பாகத்தையுடைய வரகு, பெரிய கதிருடைய திணை , சிறிய கொடியில் விளையும் கொள்ளு , புள்ளிகள் நிறைந்த அவரைப்பயறு ஆகிய இவை நான்கைத் தவிர வேறு எந்த உணவுப்பொருட்களும் இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் ஆகிய இந்நான்கு குடிகளைத் தவிர வேறு எந்தக் குடிகளும் இல்லை. நமது உள்ளத்திற்கு எதிராக உள்ள பகைவரின் முன்னே நின்று அவர் படையெடுத்து முன்னேறி வருவதை தடுத்து, ஒளிறும் உயர்ந்த தந்தங்களுடைய யானைகளுடன் களமாடிக் கொன்று, தாமும் பகைவருடன் போராடி விழுப்புண் அடைந்து இறந்த மாபெரும் தியாகம் செய்த வீரர்களின் நடுகற்களைத் தவிர, நெல்லைத் தூவி வழிபடுவதற்கேற்ற வேறு எந்தக் கடவுளும் இங்கு இல்லை.

ஆமாம் தாய் மண்ணிற்காக பகைவர்களுடன் போராடி, தனது இன்னுயிரை இழந்த அந்த மாவீரர்களின் மகத்தான தியாகத்தைப் போற்றும், நடுகற்களைத் தவிர எந்தக் கடவுளும் இங்கே இல்லை.

> தாய் மண்ணிற்காக பகைவர்களுடன் போராடி ,தனது இன்னுயிரை இழந்த அந்த மாவீரர்களின் மகத்தான தியாகத்தைப் போற்றும்,நடுகற்களைத் தவிர எந்தக் கடவுளும் இங்கே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனத்தூதுவர் தமிழ் மக்களுக்குச் சொல்லாமல் சொன்ன செய்தி?

○ நிலாந்தன்

அண்மையில் நடந்த "நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்ச் சமூகம் ஒரு சரியான முடிவை எடுத்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்" இவ்வாறு தெரிவித்திருப்பவர் இலங்கைக்கான சீனத் தூதர். கடந்த வாரம் அவர் வடக்கு, கிழக்குக்கு விஜயம் செய்தார். நாடாளுமன்றத்தேர்தல் முடிந்த கையோடு தமிழர்களை நோக்கி வந்த முதலாவது வெளிநாட்டுத் தூதுவர் அவர். யாழ்ப்பாணத்தில் அவர் யாழ். ஊடக அமையத்துக்கு விஜயம் செய்து அங்கே ஓர் ஊடகச் சந்திப்பையும் நடத்தினார். ஒரு நாட்டின் தூதுவர் நாட்டின் ஒரு மாவட்டத்தில் உள்ள "பிரஸ் கிளப்புக்கு" தானாக வந்து ஊடகவியலாளர்களை சந்திப்பது என்பது பொதுவானது அல்ல. அதில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதில்களில் ஒன்றுதான் மேலே உள்ளது. இனப்பிரச்சினைக்கு சீனா முன்வைக்கும் தீர்வு என்ன? என்று கேட்கப்பட்ட பொழுது, அவர் மேற்கண்ட பதிலைச் சொன்னார்.

அந்த ஊடகச் சந்திப்பின் தொடக்கத்தில் அவர் பின்வருமாறு சொன்னார். "இலங்கை வரலாற்றிலேயே முதற் தடவையாக தெற்கை மையப்படுத்திய கட்சியான என்.பி.பி.க்கு தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாண மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்"என்று. மேலும்,தனது யாழ். விஜயத்தின்போது தான் பருத்தித்துறைக்குச் சென்றதாகவும் அங்கே, "பல்வகைமைக்குள் ஒற்றுமையே சிறீலங்காவின் பலம் " என்ற வாசகத்தைப் பார்த்ததாகவும்,கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அந்த வாசகம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதாவது சீனா, என்.பி.பி.யின் வெற்றியை ஆர்வங் கலந்த எதிர்பார்ப்போடு பார்க்கின்றது. அந்த வெற்றியில் தமிழ்மக்கள் பங்காளிகளாக இணைந்திருப்பதை மிகவும் எதிர்பார்ப்போடு பார்க்கின்றது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய அடிப்படைகளை அது பலப்படுத்தும் என்றும் சீனா கருதுவதாகத் தெரிகிறது. மேலும் முக்கியமாக என்.பி.பி.யின் வெற்றியானது தனக்கு சௌகரியமான ஓர் அரசியற் சூழலை ஏற்படுத்தியிருப்பதாக சீனா கருதுவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் சீனத்தூதர் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்திருக்கிறார். இதில் முதலீட்டுத் துறையோடு ஈடுபாடுடையவர்கள், தொழில் முனைவோர் போன்றவர்கள் அதிகமாகக் காணப்பட்டிருக்கிறார்கள். இதற்கு முன் யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது இங்குள்ள கருத்துருவாக்கிகளையும் சந்தித்தார். அதில் சில கருத்துருவாக்கிகள் உரையாடலின் மையத்தை இனப்பிரச்சினையை நோக்கிக் குவித்தார்கள். இலங்கைத்தீவின் வளர்ச்சிக்கு சீனா எப்படி உதவமுடியும் என்ற உரையாடலில் இருந்த கவனக்குவிப்பு இனப்பிரச்சினை மீது மாற்றப்பட்டது. ஆனால் இம்முறை அவ்வாறான விவகாரங்களைத் தொடக்கூடிய கருத்துருவாக்கிகள் சந்திப்பில் தவிர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

சிவில் சமூகங்களை சந்தித்தபொழுது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான கேள்விகளை சீனத்தூதுவர் பெருமளவுக்கு தவிர்க்க முயற்சித்திருக்கிறார். ஆனால் ஊடகச் சந்திப்பில் அவர் என்.பி.பி.யின் வெற்றிக்கு தமிழ் மக்கள் பங்களித்தமையை சிலாகித்துப் பேசியுள்ளார். சீனா மட்டுமல்ல, என்.பி.பி.யின் மூத்த தலைவராகிய ரில்வின் சில்வா கூறுகிறார்.'வடபகுதி மக்கள் இனவாதத்தைப் புறக்கணித்துவிட்டு தமக்கு வாக்களித்திருப்பதாக'.

சட்டத்தரணி பிரதீபா மகாநாம என்பவர் கூறுகிறார், "இனி வரும் காலங்களில் ஜெனிவாவில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று கூற முடியாது" என்று.

விமல் வீரவன்ஸ கூறுகிறார், இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்திற்குத் தாம் எதிரானவர்கள் என்ற செய்தியை தமிழ் மக்கள் வழங்கியுள்ளதாக. ஒற்றை ஆட்சிக்குள் அனைத்து இன மக்களும் சம உரிமை கிட்டும் வகையிலான பயணத்தைத் தொடரவேண்டும் என்பதற்குரிய ஆணையே அதுவென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

மேற்சொன்ன கருத்துகளைத் தொகுத்துப் பார்த்தால் என்ன தோன்றுகிறது? என்.பி.பி.யின் வெற்றியை , குறிப்பாக அதற்கு தமிழ்மக்கள் வழங்கிய ஆதரவை வைத்து இன முரண்பாடுகள் தணிந்து விட்டதாக அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

என்.பி.பி.க்குக் கிடைத்திருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது அசாதாரணமானது. அது மூவினத்தன்மை பொருந்தியது. ஆனால் அதன் பொருள் தமிழ் மக்கள் இந்தமுறை மட்டும்தான் அவ்வாறு தெற்கில் உள்ள ஓர் அரசாங்கத்துக்கு ஆதரவளித்துள்ளார்கள் என்பதல்ல. கடந்த 2015 இல் ரணில் -மைத்திரி கூட்டரசாங்கத்துக்கும் தமிழ்மக்கள் ஆதரவை வழங்கினார்கள். ஆனால் அந்த ஆதரவை அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாகவே வழங்கினார்கள். இந்தமுறை வித்தியாசம் என்னவென்றால்,அவர்கள் நேரடியாக அரசாங்கத்துக்கே அந்த ஆதரவை வழங்கியதுதான். இந்த வித்தியாசத்தைத்தான் சீனத்தூதர் எதிர்பார்ப்போடு பார்க்கிறாரா?

இம்முறை ஒரு தொகுதி தமிழ் வாக்குகள் என்.பி.பி.யை நோக்கிப் பெயர்ந்திருக்கின்றன. ஆனால் இந்தக் கட்டுரையாளரால் திரும்பத்திரும்பக் கூறப்படுவதுபோல, அவை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் என்.பி.பி. முன்வைத்த வாக்குறுதிகளுக்காக வழங்கப்பட்ட வாக்குகள் அல்ல. அவை தமிழ்த்தேசியக் கட்சிகளின் தோல்வியின் விளைவாக வெறுப்பும் சலிப்பும் அடைந்த மக்கள் வழங்கிய வாக்குகள்தான். அண்மையில் பி.பி.சி. தமிழ்ச் சேவை தமிழ் மக்களைப் பேட்டி கண்ட பொழுது அது தெளிவாக வெளிப்பட்டது.

எனவே என்.பி.பி.க்கு கிடைத்த வாக்குகள் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக வழங்கப்பட்ட மக்கள் ஆணை அல்ல. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது அரசியலமைப்பை மாற்றத் தேவையான அடிப்படைகளில் ஒன்று. அந்த அடிப்படையில் சிந்தித்தால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கத்தோடு ஒரு புதிய யாப்பை உருவாக்க என்.பி.பி. தயாரா ?

இங்கு ஒரு முக்கியமான விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமே இனப்பிரச்சினையைத் தீர்த்து விடாது. மாறாக, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான "பொலிடிக்கல் வில்' அதாவது அரசியல் பெரு விருப்பம் என்.பி.பி.யிடம் இருக்கவேண்டும். அதை மேலும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால், மகாவம்ச மனோநிலைக்கு வெளியே வந்து தமிழ் மக்கள் ஏற்கத்தக்க ஒரு தீர்வை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அதுதான் உண்மையான மாற்றம். இதற்கு முன்னிருந்த சிங்கள ஆட்சியாளர்களிடம் இருக்காத அந்த அரசியல் பெரு விருப்பம் என்.பி.பி.யிடம் உண்டா?

இந்தவிடயத்தில் என்.பி.பி.யின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைதான் அதற்குத் தடையாகவும் இருக்கப் போகிறது. ஏனெனில் என்.பி.பி. பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை புரட்சிகரமானது அல்ல. 2019இல் மூன்று விகித வாக்குகளைப் பெற்ற ஒரு கட்சி 2024 இல் ஜனாதிபதித் தேர்தலில் 42 விகித வாக்குகளைப் பெற்றது. நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கிறது. இந்த எழுச்சியானது சிங்கள - பௌத்த கூட்டு மனோநிலையை அரசியல் மயப்படுத்தியதால் கிடைத்த எழுச்சியல்ல. முன்னைய ஆட்சியாளர்களின் மீது ஏற்பட்ட வெறுப்பினால் ஏற்பட்ட கோப எழுச்சி. ராஜபக்சக்களுக்கு வாக்களித்த அதே சிங்கள வாக்காளர்கள்தான் அவர்களை ஓட ஓட விரட்டினார்கள். அதே வாக்காளர்கள்தான் இப்பொழுது என்.பி.பி.க்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது முன்னைய ஆட்சியாளர்கள் மீது வெறுப்படைந்த சிங்கள - முஸ்லிம், மலையக வாக்காளர்களும் தமிழ்த்தேசியக் கட்சிகளின் மீது நம்பிக்கையிழந்த ஒரு பகுதி தமிழ் வாக்காளர்களும் அள்ளிக் கொடுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை அது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மக்கள் ஆணையல்ல.


என்.பி.பி. அந்த வெற்றியின் கைதியாக இருக்குமா? அதாவது இறந்த காலத்தின் கைதியாக இருக்குமா? அல்லது வருங்காலத்தின் துணிச்சலான புரட்சிகரமான தொடக்கமாக இருக்குமா?

சீனத்தூதர் தனது ஊடக சந்திப்பில் சுட்டிக்காட்டிய அந்த வாசகங்கள் எழுதப்பட்ட சிமெந்துப் பலகை பருத்தித்துறையில் உள்ளது. சிங்கக் கொடிக்குக் கீழே அந்த வாசகம் எழுதப்பட்டுள்ளது. அது படைத்தரப்பால் நிறுவப்பட்ட ஒரு விளம்பரப் பலகை. அதுபோன்ற பல தமிழ்ப் பகுதிகளில் உண்டு. குறிப்பாக 2009 இல் ஆயுத மோதல்கள் முடிந்த கையோடு "ஒரே நாடு ஒரே தேசம்" என்ற சுலோகம் ஒரு வெற்றிக் கோஷமாக முன்வைக்கப்பட்டது. பல படை முகாம்களின் முகப்பில் அல்லது மதில்களில் அது எழுதப்பட்டது. இப்பொழுது பல்வகைமைக்குள் ஐக்கியம் என்ற வாசகம் மிஞ்சியிருக்கிறது. பலாலி பெருந்தளத்தின் வடமராட்சி எல்லை என்று வர்ணிக்கத்தக்க ஒரு திருப்பத்திலும் இந்த வாசகம் உண்டு. தமிழ் மக்களின் நிலத்தைப் பிடித்து வைத்திருக்கும் ஒரு படைத்தரப்பின் சுலோகங்கள் அவை. பல்வகைமைக்குள் ஒற்றுமை என்று அங்கு கூறப்படுவது அதன் மெய்யான பொருளில் சிங்கக் கொடியின் கீழ் 'ஒரே நாடு ஒரே தேசம்' என்பதுதான்.

சீனத்தூதுவர் அதை உதாரணமாகக் காட்டுகிறார். ரில்வின் சில்வாவின் கருத்துகளும் அதைத்தான் நிரூபிப்பனவாகக் காணப்படுகின்றன. தமிழ் மக்கள் இனவாதத்தைப் புறக்கணித்திருப்பதாக அவர் கூறுகிறார். தமிழ்த்தேசிய அரசியல் நிலைப்பாடு என்பது இனவாதம் அல்ல. சிங்கள - பௌத்த பெருந்தேசிய வாதம் தமிழ் மக்களை ஒடுக்கியது. தமிழ் மக்களுடைய தேசிய இருப்பை அழிக்க முற்பட்டது. அதற்கு எதிரான போராட்டத் தத்துவந்தான் தமிழ்த் தேசியவாதம். அதில் ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். ஆனால் ஒடுக்குமுறைக்கு எதிரானது என்பதனால் அது முற்போக்கானது என்று மார்க்சியர்கள் கூறுவார்கள். எனவே தமிழ்த்தேசியவாதம் இனவாதம் அல்ல. அதை இனவாதம் என்று கூறுவதுதான் சுத்த இனவாதம்.

அதுபோலவே ஜனாதிபதி அநுரவின் புதிய நாடாளுமன்றத்துக்கான முதலாவது உரையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்துத் தெளிவான அரசியல் அடர்த்தி மிக்க வாக்குறுதிகள் இல்லை. மாறாக மேலோட்டமான பொத்தாம் பொதுவான சொல்லாடல்தான் உண்டு. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் பெரு விருப்பம் என்.பி.பி.யிடம் உண்டு என்று நம்பத்தக்க துணிச்சலான வார்த்தைப் பிரயோகங்கள் அங்கு இல்லை. சீனத்தூதுவர் தன்னையறியாமல் சுட்டிக்காட்டியதுபோல சிங்கக் கொடியின் கீழ் பல்வகைமைக்குள் ஒற்றுமை தான் அவர்களின் தீர்வா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாணத்தில் 7 நாட்கள்....

பேராசிரியர் க.பஞ்சாங்கம்
புதுச்சேரி

**மற்றொரு கவிதை :**

*“நேற்று என் கனவில்*
*புத்தர் பெருமான் சுடப்பட்டு இறந்தார்*
*சிவில் உடை அணிந்த அரச காவலர்*
*அவரைக் கொன்றனர்*
*யாழ். நூலகத்தின் படிக்கட்டு அருகே*
*அவரது சடலம் குருதியில் கிடந்தது .*
*தொண்ணூறாயிரம் புத்தகங்களால்*
*புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்.*
*சிகாலோவாத சூத்திரத்தினைக் கொளுத்தி எரித்தனர்*
*புத்தரின் சடலம் அஸ்தியானது*
*தம்மபதமும்தான்*
*சாம்பரானது.”*

நுஃமானின் அந்தக் கவிதை தந்த பெண் பரப்பிய சோகம் மண்டபத்தை அடைத்து நிறைத்தது.

உரைஞர் திரைக்குள் இருந்து மீண்டும் தொடர்கிறார்:

“பெரிதிலும் பெரிதாக எண்ணி, அரிதிலும் அரிதொன்று கண்டு, சிறிதிலும் சிறிதாகிப் போன கொடிதிலும் கொடி தான வாழ்வு! கொட்டித் தீர்க்க முடியாத சோகம்... யாரை நோவோம்? யார்க் கெடுத்துரைப்போம்?... பரிவை வேண் டுவதா? பரிகாரம் தேடுவதா? பழம்துயரைப் பாடுவதா?... காலம் மருந்திடும் என்றெண்ணிக் காத்துக் கிடப்போமா?... அறம்பாடி அறம்பாடி நம்மை நாம் நோவோமா? அறம் பாடி அறம்பாடி அவரை நாம் நோவோமா? அறம்பாடி அறம்பாடிக் காலத்தை நோவோமா?...” கையறு நிலை யின் உச்சம் அல்லவா இது!

மீண்டும் மாணவிகளின் கவிதைச் சோகம் புதுவை இரத் தினதுரையின் கவிதையோடு இப்படி இழைகின்றது :

*மான் சுட்டால் அன்றி*
*மரை சுட்டால் மயில் சுட்டால்*
*ஏன் என்று கேட்க*
*இந்நாட்டில் சட்டம் உண்டு.*
*ஆனைக்குக் கூட அனுதாபப்படும் நாட்டில்*
*மனித உயிர் மட்டும் மலிவு...*
*மிக மலிவு...*
*வீதியிலோ அன்றி வீட்டினிலோ*
*பள்ளியிலோ, பாதி இரவினிலோ*
*பஸ்ஸினிலோ படுக்கையிலோ*
*நாங்கள் சுடப்படலாம் நாய் போல...!*

மற்றொரு மாணவி சேரனின் கவிதை கொண்டு அறம் பாடித் தொடர்கிறார்:

***நெல்லும் உயிரல்ல நீரும் உயிரல்ல***
***முல்லை நிலத்தில் அலைந்து உழன்றவரை***
***கொல்லும் எறிகணைகள் கூட்டாக வீசியவன்***
***மன்னாதி மன்னன் என மார்தட்டிக் கொள்கிறான்***
***எண்ணிக்கை யாருக்கு வேண்டும்?***

*மொழியால் அமைந்த நிலம் எனச்*
*சங்கத் தமிழோடும் செம்மொழியின் வனப்போடும்*
*புதைகுழிக்குள் போனவர்கள் நாங்களன்றோ!*
*குழந்தைகளின் மென் கரத்தை அரிந்து*
*நெருப்பில் எறிந்தவனுக்குத் தாம்பூலம் தந்து,*
*தாலாட்டுப் பாடி, கால்கள் வருடி ,*
*தலை மயிருக்கு நிறம் தீட்டியவன்*
*பேழ் வயிறைவழிபட்ட*
*அப்பாலும் அடி சார்ந்தார்*
*இப்பாலும் இருப்போர்கள்*
*முப்பத்து முக்கோடி படையினர்கள் எல்லாம் பட்டு அழிவதன்றி*
*வேறென்ன கேட்கும் என் கவிதை ?.*

அடுத்து ஒன்பதாவது காட்சியில் மூன்று மாணவிகள் கவிதை சொல்ல முன் வந்து நின்றனர். இந்தக்காட்சிக்குத் தலைப்பாக “போராட்டத்தின் பின்னான வாழ்வின் கிளைப்பு” என்பது அமையலாம். திரைக்குள் இருந்து குரல் ஒலிக்கிறது இவ்வாறு:

“போரின் உலைவுகளாலும் அலைவுகளாலும் கிளைத் துப் போனது வாழ்வு. விட்டு விடுதலையாக நினைத்தவர் விட்டகன்றனர். வீடு தொலைத்தனர். வாழ்வு தொலைத் தனர். வாழ்ந்த இடத்தை நினைந்தே வருந்தினர். வாழ்வு என்பது வெறுமை என்றனர். போன பாதையின் முடிவை கண்டிலர். கண்ணாடித் தொட்டியில் வாழ்வை வைத்து இர சித்தனர். கொள்கை முரண்களால் கோலமிழந்தனர். வெறுமை.... வெறுமை... எதிலும் வெறுமை... எல் லாம் வெறுமை”

அந்த வெறுமை மாணவிகளின் குரலில் அழைந்து வெளிப்பட்டன. முற்றிலும் வெறுமையைப் பாடின அந்தக் கவிதைகள்

இறுதியாகப் பத்தாவது காட்சி, “மனித உரிமைக்கான தேடல்” என்பதாக முடிகின்றது. திரைக்குள்ளே இருந்து ஏக்கம் தொனிக்கக் குரல் வருகிறது:

“இழந்தவை ஏராளம். எனினும் எதை நாம் வென்றோம்? வடிவங்கள் வேறாய் நின்று வருந்தினோம். உரிமைகள் வெல்வதொன்றும் சுலபமாய் நிகழ்வதில்லை. உலகமே வழிகாண துடியாகத் துடிக்கிறது. மானிடத்தின் விடுதலை யைத் தேடிக்காண வழியென்ன? தேடுகின்றோம்... தேடுகின்றோம்... தேடிக்கொண்டே வாழுகின்றோம்... வாழ்ந்துகொண்டே தேடுகின்றோம்.”

தொடர்ந்து அதே ஏக்கத்தொனியோடு மாணவிகளின் கவிதைக் குரல் கற்பகம் யசோதராவின் கவிதையோடு வருகின்றது :

***“அங்கும் இங்கும் ஓடினேன் ,***
***பீதியை முதன்முதலாய் உணர்ந்து.***
***அன்று கதவுகள் பூட்டப்பட்டு விட்டன ...***
***...***
***சுவர்கள் அங்கேயே இருந்தன விறைத்து***
***கதவுகள் திறபடவே இல்லை.***
***பதற்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என் பாற்தசைகள் சுவரெங்கும் சிதற*
*நீங்கள் எனது தகப்பனைக் கொன்றீர்கள்!*
*தன் அருகாமையில் இருத்தி எனக்காய்ப் பாடிய*
*அவரது பாடல்களைக் கொன்றீர்கள்!”*



இந்த வரிகளைக் கேட்டபோது விவரம் தெரிவதற்கு முன்பே தகப்பனை இழந்த என் இதயம் நீரில் மிதப்பது போல் ஆகிவிட்டது.

இறுதியில் அரங்கைத் திரை மூடுகின்றபோது அரங்கம் அதிர்ந்தது. நான் என் ஈரம் கசியும் கண்ணைத் துடைத் துக் கொண்டேன். மாணவிகளையும் நிகழ்ச்சியை ஒருங் கிணைத்தவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். நிகழ்த்துக் கலை போல கவிதைகள் மேடையில் உணர்ச்சி கொப்பளிக்க வெடித்தபோது அக்கவிதைகளை எழுதிய கவிஞர்களின் பெயர்களைச் சொல்ல இயலாது என்றா லும் நிகழ்ச்சி முடிவில் மொத்தமாகக் கவிஞர்களின் பெயரை ஒருங்கிணைப்பாளர்கள் வாசித்திருக்கலாம் எனச் சொல்லத் தோன்றியது

இந்த நிகழ்வு மூலம், சாவுக்குத் தப்பிவிட்ட ஈழத்தமிழர் குறிப்பாக இளைஞர்கள் ஒவ்வொருவரின் இதயத்திலும் விடுதலைக் கனல் அவிந்து போகாமல்பொத்திப் பாதுகாக் கப்படுகிறது. கூடவே அடுத்த தலைமுறைக்கும் இந்த நெருப்பு கடத்தப்படுகிறது என்பதையும் புரிந்து கொண் டேன். மேலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்திற் குள் மாணவர்களால் முள்ளிவாய்க்கால் நினைவாக நிறுவப்பட்டுள்ள இரண்டு நினைவுத்தூபிகளும் “பொங்கு தமிழ்ப் பிரகடனம் 17.01.2001” என்ற கல்வெட்டும் இதை உறுதிப்படுத்துகின்றன.

இதையேதான் முள்ளிவாய்க்காலுக்கு எங்களை அழைத் துச் சென்ற, சமீபத்தில்தான் இலண்டனில் தன் முது கலைப் படிப்பை முடித்துவிட்டுத் திரும்பி இருந்த அந்த மாணவத் தம்பியின் ஆர்வம்மிக்க செயற்பாடுகளும் பேச்சுகளும் நினைவுபடுத்தின. 2005 இல் பிறந்து வளர்ந்து, இப்பொழுது பல்கலைக்கழகப் படிப்பிற்குள் செல்ல இருக்கிற ஒரு கனமான மாணவரையும் கூடவே அவர் அழைத்து வந்திருந்தார். காரில் போகும் போதே, இந்தத் தம்பி இங்கே யாழ்ப்பாணத்தில் பிறந்தும் இன் னும் முள்ளிவாய்க்காலுக்கே போகாமல் வளர்ந்திருக்கி றான். இன்றைக்கு இவன் இவற்றையெல்லாம் உங்க ளோடு சேர்ந்து பார்த்து விட்டுத் தன் பின்னால் வருகிறவர் களுக்கும் கடத்துவான் என்றுதான் அழைத்து வருகிறேன் என்றார். அந்தப் பயணம் குறித்து அடுத்து வருகிற பகுதி யில் பார்ப்போம்.


(தொடரும்)

# சிறுவர் கைவண்ணம்


மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



ப.பரூஷயன்
தரம் - 8H
யா/ இந்துக் கல்லூரி



அர்ஜிகா
தரம் - 7
மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்




செ. தர்வின்
தரம் - 8H
யா/ இந்துக் கல்லூரி



அ.கிருக்ஷா
தரம் - 03
யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்



த.ஜனுசியோன்
தரம் - 3B
மு/ உடையாளர்கட்டு அ.த.க. பாடசாலை.




தீ.நயனிகா
தரம் - 3C
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

# ஊர்ப்புதினம்

பாகம் 3

○ இராகவன்

எங்கட வீட்டை அப்ப வெட்டுக்கிணறு இல்லாத தால அண்டைக்கும் கன கராவளவுப் பரமானந்தப் பிள்ளையார் கோவில் கிணத்தில் பிடிச்ச கலர் மீன் முழுக்க சிவன் தங்கட வீட்டுக் கிணத்தில தான் கொண்டு போய்விட்டிட்டான். முருகனும்கண்ணனும்தங்கடவீட்டுக்கிணத்துல விட, கொஞ்சம் கலர் மீன் தரசொல்லிக் கெஞ் சினவங்கள். 'கோயில் கிணத்தில பிடிச்ச மீன் செத்துதெண்டால் பெரும் பாவம் வந்துசேரும். உங்கட கிணத்துத் தண்ணி சரியான பச்சை யுப்பு.சும்மா முகம் கழுவினாலே முகம் எல்லாம் எரியும்.இந்த மீனுகளகொண்டே அதுக்குள்ள விட்டால் விட்ட மறுகணமே செத்திடும் எண்டு சொல்லி மறுத்திட்டன்.பிறகு ஒரு கட்டத்தில மீன் பிடிக்கிறதில பெரிசா இன்ரஸ்ட்இல்லாமலும் போச்சு.

ஒக்ரோபர் மாதத்தில தீபாவளி வரும் செப்ரெம் பர் தொடங்கினதுமே விதவிதமான தீபாவளி காா்ட்டெல்லாம் கடையளுக்கு வந்துதொங்கும். முந்தியெல்லாம் சாமிப் படங்கள் தான் வரும். பிறகு காலப்போக்கில நடிகர்மாற்ற படங்கள் எல்லாம் வரத்தொடங்கிட்டுது. நான் எப்பவும் சுவாமிப்படங்களைத்தான் வாங்குவன் . எங்கட ஊரில மூண்டு கடையிருந்தது. முதற்கடை எங் கடபெரியாம்பியின்ர கடை. அவரின்ர கடையில எல்லாச் சாமானும் விப்பார்.ஆனால் ஏனோ தீபாவளி காா்ட் மட்டும் விக்கிறேல. இரண் டாவது கடை பொலிஸ் ஆறுமுகமண் ணையின்ர கடை.அதில தீபாவளி காா்ட் விக்கிறவை. மூண்டாவது கடை நாதன் அண்ணையின்ர கடை. சிலர் அதை தம்பையா கடை எண்டும் சொல்லுவி னம்.

06

நாதண்ணையின்ர தகப்பன் தான் தம் பையாண்ணை. அந்தக் கடையைத் தொடங்கி னது அவர் தான்.பிறகு நாதண்ணை அந்தக் கடையை நடத்தினவர். தம்பையாண்ணைய செக்குத் தம்பையா எண்டுங்கூப்பிடுவினம். ஏனெண்டால் அவர் எண்ணெய்ச் செக்கு நல் லெண்ணெய் ஊத்திறவர்.எள்ளுப்பாகு ,புண் ணாக்கு எல்லாம் அவையல் விக்கிறவை. தம் பையாண்ணை மன்னார் மடு மாதாவின்ர திருவிழாக்காலத்தில இஞ்சையிருந்து நல் லெண்ணெய், எள்ளுப்பாகு, நார்ப்பெட்டி ,கட கம் ,பெட்டி மூடல் எல்லாம் கொண்டுபோய்விக் கிறவர். அவர் கொஞ்சம் தாண்டித் தாண்டித் தான் நடப்பார். அவரில எனக்கு பிடிச்ச விசயம் என்னவெண்டா அவர் எல்லாத்துக்கும் 'சிவம்! சிவம்!' எண்டு சொல்லுவார். அவருக்கு ஒரு தமையன் இருந்தவர். அவரைக் காவடிவேலுப் பிள்ளையார் எண்டு சொல்லுவினம்.அப்ப அவர் எங்கட ஊரில வலு பேமஸான பரிகாரி யர்.அவரை காவடிப்பரியாரியார் எண்டும் சொல் லுறவை. அவரும் கதைக்கேக்குள்ள 'சிவம் ! சிவம்! ' எண்டு சொல்லுவார்.ஊரில ஆருக்கு காய்ச்சல், தலையிடி, வயித்துக்குத்து வந்தா லும் உடனயா காவடிப் பரியாரியாரிட்டத்தான் போவினம்.அவரின்ர மகன் செல்வநாதன். றேடியோ திருத்திறதில வலு விண்ணன். நான் இரண்டொருதடவை அவற்ர வீட்டை போயிருக் கிறன். ஒரு பக்கம் பரியாரியாரின்ர டிஸ்பென்சரி, மறுபக்கம் செல்வநாதன்ர றேடியோ றிப்பியறிங் சென்ரர் எண்டு இரண்டு பிரிவாயிருக்கிறதைப் பார்த்திருக்கிறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் போக்குவரத்தில்

# மினிபஸ்கள்

சௌந்தராஜன் துர்ஷிகா,
இரண்டாம் வருட மாணவி,
ஊடககற்கைகள் துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்துத்துறை தொடர்பில் பேசுகின்றபோது, மினிபஸ்களைத் தவிர்த்துவிடமுடியாது. போர்க்காலத்தில் தட்டி வான்கள் எப்படியோ அப்படித்தான் இக்காலத்தில் மினிபஸ்கள் மாறியிருக்கின்றன. நவீன உலகில் போக்குவரத்து என்பது மிகப் பிரதானமானது. போக்குவரத்தின்றி இன்று எதுவுமில்லை என்ற 21ஆம் நூற்றாண்டில், தனியே அரச பேருந்துகளை மட்டுமே வைத்து, அனைத்து மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்துவிடவோ அல்லது நிவர்த்தித்து விடவோமுடியாது. அப்படிப்பட்ட ஒரு பெருங்குறையைப் போக்குவதற்கு வாய்த்த வரம்தான் மினிபஸ்கள்.

சரி, எதற்காக மினிபஸ்களையும் யாழ்ப்பாணத்தையும் பற்றிப் பேசவேண்டும்?. காரணமிருக்கின்றது இலங்கையில் வேறெந்த மாவட்டங்களிலும் பார்க்க மினிபஸ்கள் அதிகம் பயன்படுத்தப்படும் மாவட்டம் யாழ்ப்பாணம்தான். இன்னும் சொல்லப்போனால் அரச பேருந்துகள் இன்னும் பயணிக்க ஆரம்பிக்காத எத்தனையோ இடங்களில் மினிபஸ்களே போக்குவரத்துக்கான ஒற்றைத் தெரிவாக மக்கள் முன்னிலையில் உள்ளன. ஆதலால்தான், யாழ்ப்பாணப் போக்குவரத்தையும் மினிபஸ்களையும் பிரித்துப் பேசிவிடமுடியாது. இளவாலை, சேந்தான்குளம், வலித்தூண்டல், ஊறணி, அச்சுவேலி, காரைநகர், பருத்தித்துறை என இன்னும் பல பகுதிகளிலும், மீள்குடியேற்றப் பிரதேசங்களிலும் மினிபஸ்களின் அருமை அதிகம் உணரப்படுகின்றது. முழு அமைப்புப் போராட்டங்களின்போது மினிபஸ்கள் ஓடாவிட்டால், எத்தனையோ கிராமங்கள் நகர்ப் புறங்களில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடுகின்றன. இதன்மூலமும் நாம் மினிபஸ்களின் மேம்பட்ட தன்மையை உணர்ந்துகொள்ளலாம்.

மினிபஸ்களில் அளவுக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. அதுவொன்றும் தீர்க்கப்படமுடியாத பிரச்சினை அல்ல. பஸ்களுக்கான வாய்ப்புகளை (ரூட்) அதிகம் வழங்கும்போது பயணிகளை அடைந்தபடி பயணிக்கும் கலாசாரம் குறையும் என்பது எதிர்பார்ப்பு. அத்துடன், குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்னர் அதாவது அனேகமாக இரவு 7 மணி அல்லது 8 மணிக்குப் பின்னர் மினிபஸ்களின் போக்குவரத்துகள் முற்றாக நிறுத்தப்படுகின்றன. இந்த நிலையை மாற்றியமைத்து சேவை விரிவாக்கத்தைச் செய்யும் பட்சத்தில் மினிபஸ்கள் யாழ்ப்பாணத்தின் போக்குவரத்துத் தலைவிதியை இன்னுமின்னும் தீர்மானிக்கும் என்பதில் ஐயமில்லை.



## அத்தியாவசிய தேவையின் அமைவிடமாக!

செ.அனுத்திரா
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பெட்டிக்கடையா! எங்கோ கேட்ட ஞாபகமாய் இருக்கின்றதா? என்று ஆச்சரியத்துடன் வினவும் காலம் மெல்லமெல்ல அணுகிக் கொண்டிருகின்றது. இன்று வணிக வளாகங்கள், பல்பொருள் அங்காடிகள் என்று எத்தனையோ தோற்றம் பெற்றாலும் எம் வாழ்வில் இரண்டறக் கலந்தவையாக இந்தப் பெட்டிக் கடைகள் அமைந்திருந்தன என்பதை ஒருபோதும் மறுக்கவோ அல்லது மறக்கவோ முடியாது. கிராம மக்கள் மத்தியில் முக்கியமான இடத்தை பெட்டிக் கடைகளே இன்றும் பிடித்துள்ளன. பண்பாட்டையும் பொருளாதார நிலையையும் எடுத்துக் காட்டுகின்றவையாகவும் அவை அமைகின்றன.

தொழில் முயற்சியின் ஆரம்பப் படிநிலை பெட்டிக்கடைகள்தான். இந்தப் பெட்டிக் கடைகளின் ஆரம்ப வரலாறு விசித்திரமானது. ஆரம்ப காலத்தில் மக்கள் தம்மிடம் மிதமிஞ்சியிருந்த பொருள்களை பண்டமாற்றுச் செய்வதற்கும், வணிகமாக்குவதற்கும் பயன்பட்டதுதான் இந்தப் பெட்டிக்கடைகளாகும். அவற்றின் தொடர்ச்சியாக அவை பிரதான வணிக மூலங்களாக மாறிக்கொண்டன.

பெட்டிக்கடை உரிமையாளர் என்பவர் சிறந்த பொதுமக்கள் தொடர்பைக் கொண்டிருப்பார். மக்களுக்கு தேவையான உதவியை சரியான தருணத்தில் வழங்குபவராகவும் காணப்படுவார். ஊரில் உள்ள அனைவரையும் தெரிந்து வைத்திருப்பார் மக்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொண்டு மக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி இருப்பார். இதனால் பெட்டி கடைகள் என்றாலே தனிசிறப்பை பெற்றுவிடுகின்றன. ஊரவர்கள் பெட்டிக்கடையாளருடன் இணைந்து நண்பர்களாக கூடி கடையின் முன்னால் தைரியமாக அரட்டை அடிப்பார்கள், பல காதல் கதைகள், அரசியல் முடிவுகள், அனைத்தும் இனிதே நிறைவேறும்.

நவீனத்துவத்தின் அதீத வளர்ச்சியால் பெட்டிக்கடைகள் இன்று மெல்லமெல்ல அழிய ஆரம்பித்துள்ளன. பெட்டிக்கடைகளின் இன்றியமையாத் தேவையைக் கொரோனா பெருந்தொற்று எமக்குக் கற்றுத் தந்தது. எனவே, பழைமையை மறவாது எம்மவருக்கான முயற்சியில் கைகோர்ப்போம்.



# தடம் – 143

## காத்திருப்பு அவர்களுக்கு புதிதல்ல

தருமலிங்கம் லுகிர்தா
*ஊடக கற்கைகள் துறை*
*யாழ். பல்கலைக்கழகம்.*

'தடம் 143' எனும் திரைப்படமானது நர்கஸ் அபியர் இயக்கத்தில் 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஈரானிய திரைப்படமாகும். இந்தத் திரைப்படம் மூன்றாம் கண் நாவலின் திரைத்தழுவலாக அமைவதோடு, ரசிகர்களுக்கு பிடித்த சிறந்த படத்துக்கான கிறிஸ்டன் பீனிக்ஸ் விருதையும் பெற்றுக்கொண்டது.

யுத்த வடுக்களைச் சுமக்கும் மக்களுக்காக குறிப்பாக எம்மவர்களின் தியாகத்தையும், உச்சக்கட்ட துயரின் வலிமையினையும் நினைவூட்டுவதற்காக சமர்ப்பணம் செய்யப்படுகிறது. பார்வையாளர்களுக்கு போர்க்கால அனுபவங்களின் வலி, நம்பிக்கை மற்றும் சகிப்புத் தன்மைக்கு ஒரு சாளரத்தை வழங்குகிறது. ஈரானியப் பெண்களின் தியாகங்களையும், மன வலிமையினையும் மனக்கண்முன்னே கொண்டு வந்துள்ளார் இயக்குனர் நர்கஸ் அபியர்.

திரைப்படத்தின் கதையானது, போருக்குச் சென்று காணாமல்போன மகனைத் தேடும் தாயின் பரிதாப நிலையினை எடுத்துக்காட்டுவதாகவும், தாய் தன் மகனைப் பற்றிய தகவலை அறிந்துகொள்ளப் போராடி இறுதியில் மகனைக் கண்டு கொள்கிறாளா? இல்லையா? என்பதை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

பிரதான கதாபாத்திரமாக மகனைத் தேடும் தாய் ஓல்பட் என்பவரும் துணைப் பாத்திரங்களாக அவரது சகோதரி, தந்தை, பாட்டி போன்றவர்களும் காணப்படுகின்றனர். எதிர்ப்பாத்திரமாக ஈரான் - ஈராக்குடனான 8 ஆண்டுகால போர்ச்சூழல் காணப்படுகிறது. ஆரம்பத்தில் மகன் போருக்குச் செல்வதை விரும்பாமல் தடுக்கும் தாய் மகன் இல்லாமல் தனியே தவிப்பதையும், அன்றாடக் கடமைகளை மேற்கொள்வதற்கு சிரமப்பட்டு பயணிப்பதையும், போருக்குச் சென்று திரும்பி வரும் வீரர்களிடம் தனது மகனைப் பற்றி விசாரிப்பதையும், தனது முதுகில் வானொலியை கட்டி சுமந்து திரியும் தாயின் மன வலிமையையும் பேசுவதாக காண்பிக்கப்படுகின்றன.

இயற்கையான ஒலியை பிரயோகிப்பதனூடாக பார்வையாளர்களை யதார்த்தத்துடன் இணைத்து வைத்திருப்பதாக இந்தத் திரைக்கதை அமைகிறது. விதியின் நிச்சயமற்ற தன்மையுடன் அவள் போராடும்போது, நம்பிக்கை, விரக்தி மற்றும் பின்னடைவு ஆகியவற்றின் மூலம் தாயின் பயணத்தை படம் ஆராய்கிறது. பின்தங்கியவர்கள் மீது போரின் உணர்ச்சி மற்றும் உளவியல் தாக்கங்களை வலியுறுத்தும் விதத்தில் கதை விரிவடைகிறது. தெரியாதவர்களுடன் வாழும் அன்றாட சவாலை எதிர்கொள்ளும் தனிநபர்களின் தனிப்பட்ட தியாகங்கள் மற்றும் நீடித்த மனப்பான்மையை திரைப்படம் எடுத்துக்காட்டுகிறது. படத்தின் முதன்மைக் கருப்பொருள்களில் ஒன்று போர்க்காலத்தில் பலர் அனுபவிக்கும் நிச்சயமற்ற தன்மை மற்றும் கவலையின் பரந்த உணர்வைக் குறிக்கிறது. திரைப்படத்தின் களமானது வீடு, நேர்காணல் நடத்தப்படும் இடம், மகனைத் தேடி அலையும் இடங்களாக அமைகின்றன. திரைப்படத்தின் இறுதி முடிவானது தாய் ஓல்ஃபட்டுக்கு மகன் யோனோசின் உடல் கண்டுபிடிக்கப்பட்டு எலும்புக்கூடுகள் ஒரு சவப்பெட்டியில் அடைக்கப்பட்ட நிலையில், ஈரானிய கொடியால் மூடிக்கொடுக்கப்படுகிறது. ஒரு குழந்தையை கையால் தூக்கி அணைத்துக்கொள்வதைப் போல அந்த எலும்புகளை தூக்கி தன்னுடன் ஆரத் தழுவிக் கொள்ளும் வகையில், அவளுடைய மகன் பற்றிய தேடலுக்கு இறுதியில் எலும்புக்கூடுகளே கிடைப்பதாக சோகமான முடிவுடன் அமையும் திரைப்படமாக இது அமைகிறது.

இந்தத் திரைப்படத்தின் தலைப்பின் பொருத்தப்பாடானது, ஓல்பட்டின் மகன் ஜோனாசினுடைய உடல் கண்டெடுக்கப்பட்ட இடமாக 'தடம் 143' என்பது காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org